Regd No. M. 4900. 16-பக்கங்கள்.

குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 27-11-1948 சனிக்கிழமை } மலர் 12.

புறப்படுவீர் !

மானத்தை யிழந்தேனும் பதவி காத்து
மனதறிய வேண்டாத இந்தி கொண்டு
கானமயில் ஆட்டம்போல் ஆடுகின்றார்
கலக்கமிகப் பெற்றிட்டார் கவலை யற்றார்
போனபோன இடமெல்லாம் சந்து தேடிப்
புதுவழியில் நுழைகின்றார் பின்னு மென்ன?
ஆனபிழை அத்தனையும் பொறுத்துப் பார்த்தோம்
அடிபட்டோம்; ஆட்பட்டோம்; அல்ல லுற்றோம்;
ஒடிபட்டோம் கால்கைகள்; கண்ணி ழந்தோம்;
இத்தனையுஞ் செய்துபார்த் திளைத்த பின்னர்
ஆண்மையினைச் சோதிக்க ஆசை கொண்டார்
ஈனமதே; இனிப்பொறுத்தல் இழுக்கே யாகும்
ஈரோட்டுப் பாதையிலே இனிமை கண்டோம்
எழுந்திடுக வரிப்புலியே! தமிழைக் காக்க
நிலைமைமிஞ்சிப் போகையிலே நீறாக்கல்தான்
நிலையான பொறுமையென்றார் புரட்சி வீரர்
ஆதலினால் இன்றின்னே அஞ்சாநீர்! புறப்படுவீர்!
அதுவேநம் புதுவுலகப் புரட்சி யாமே!

—புலவர் அழகுவேலன்.

1948 DECEMBER. 1948

SUN	MON	TUE	WED	THU	FRI	SAT
			1	2	3	4
5	6	7	8	9	10	11
12	13	14	15	16	17	18
19	20	21	22	23	24	25
26	27	28	29	30	31	

சிந்திக்க வேண்டாமா?

★

“கட்டப் பொம்மு நாடகத்திற்குத் தடை! வெள்ளைக்கொக்கு பறக்குதடி பாப்பா-என்ற பாடல் பாடக்கூடாது! நாடகத்திற்குத் தடையா? பாட்டிற்குக்கூடத்தடையா? அய்யோ! ஆட்சியாளருக்கு அச்சமா? ஆணவங்கொண்ட வெள்ளை எகாதிபத்யம் எவ்வளவு ராணுவங்களைப் பெற்றிருந்துங்கூட நாடகத்திற்கும்—பாட்டிற்கும் அஞ்சுகிறதே. நமது சர்க்கார் ஏற்பட்டால் இப்படி அர்த்தமற்ற அடக்குமுறைகள் இருக்குமா?”

இருக்குமா? என்ற வினாவோடு மேடையிலே கிடு, கிடுக்கப் பேசிய பூமான்கள் யார்? இப்போது நாட்டை ஆளுகின்ற நம்மதிப்புக்குரிய தேசிய வாதிகள், இல்லை அஹிம்சா வாதிகள்தான் அப்படி முழக்கினார்கள். ஆனால் உண்மையிலே நடப்பதென்ன? அடக்குமுறை அவர்களுக்கு ‘அல்வா’வாக ஆகிவிட்டது.

போர்வாள் நாடகத்திற்குத்தடை—செங்கொடி காத்த சிகப்பி, இரணியன் போன்ற நாடகங்களுக்கெல்லாம்தடை! கட்டபொம்மு நாடகத்திற்குத் தடை செய்ததை எளனமாகப் பேசிய வீரர்களே இப்படிச் செய்கிறார்கள் என்றால் என்ன அர்த்தம்?

நாடகங்களுக்கு மட்டுமல்ல தடையுத்தரவு. பொதுக்கூட்டங்களுக்கும், செய்தித்தாள்களுக்கும், இராவண காவியம் போன்ற இலக்கியப் புத்தகங்களுக்கும் கூட தடையுத்தரவு பிறப்பிக்கப்படுகின்றன. இப்போது கவிஞரின் குயிலுக்கும் கூட தடை உத்தரவாம். சுருங்கக்கூறின் மனித சுயேச்சைக்கே தடையுத்தரவுகளும் ஆணவ அடக்குமுறைகளும் உருவாகி வருகின்றதைக் கண்டவண்ணமேதான் இருக்கின்றோம்.

இந்தி இஷ்டபாடமென்று திரு. அவினாசியார் கூறி விட்டு, படிக்க முடியாதென்கின்ற குழந்தைகளைப் பள்ளியை விட்டு வெளியே விரட்டுங்களென்று சொல்வதிலிருந்து மனித சுயேச்சை பறிபோவதையும், இம்மாதிரி இஷ்டபாடமென்று சொல்லி கஷ்டமாக்காதீர் என்று சொல்கின்றவர்களை சிறையில் தள்ளுங்கள், என்று செய்கின்ற ஆணவச் செயல்களையும் எண்ணும்போது, ஆட்சியிலே ஆணவ அடக்குமுறைகள் உருவாகி விட்டதை மக்களெல்லோருமே அறிகின்றார்கள்.

ராமதூனை எதிர்த்த ஆணவக்கிறித்துவ அதிகாரிகளை ஒடுக்கிய வீரமானவர்களே! சபாஷ்! என்றதலைப்போடு, நடுப் பக்கத்தில் கட்டமிட்டு விளம்பரஞ் செய்யப்படுகின்றது தேசியத் திருத்தாளிலே. நடப்பது மதச்சார்பற்ற ஆட்சி! ஜனநாயக ஆட்சி! என்று விளம்பரப்படுத்துவதும் அதே தேசியத் திருஏடே. ராமதூன் பாடலை எதிர்த்த கிறித்துவ அதிகாரிகளைக் கண்டித்து எளனஞ்செய்கின்றது அதே தேசிய ஏடு. கிளர்ச்சியில் வெற்றி பெற்றமாணவர்களை சபாஷ், கூறுகின்றது; தட்டிக்கொடுக்கிறது. பொதுப்பள்ளிகளிலே—பல விதமான மத இளைஞர்கள் பயில்கின்ற பள்ளிகளிலே ராமதூன் பாட வேண்டுவது அவசியந்தானா? ஸ்ரீ ராமனைத் துதிப்போர்தான் பள்ளிக்குச் செல்லவேண்டுமா? கிறித்துவ அதிகாரிகளைக் கண்டித்து மாணவர்களைக் கிளர்ச்சி செய்யச் செய்வதும், அதில் வெற்றி பெறுவதும், அதைத் தேசிய திருஏடு ‘சபாஷ்’ போட்டுப் பதிப்பதாலும்மட்டும் பொது மக்கள் நல்லுறவு—நட்பு, அன்பு வளர்ந்து விடுமா?

பள்ளிகளிலும், பொது இடங்களிலும் இம்மாதிரி ஸ்ரீ ராமனையும் அல்லாவையும், இயேசுவையும், வேறு எவரையும் குறிக்கும் மதச்சார்புள்ள வழிபாடுகளை நுழைக்கக்கூடாது என்பதல்லவா, மதச்சார்பற்ற ஆட்சி, நடத்துவோர் செய்யவேண்டும்.

காந்திஜெயந்தி கொண்டாடப்பட்டதாம் ஓர் ஊரில். அதுகூட விசேஷமல்ல நம் திருதேசிய இதழுக்கு. மகம்மதியர்கள்மசூதி வழியாகவே ஜெயந்தி கொண்டாடியவர்கள் மேளவாத்தியங்களுடனே ஊர்வலம் சென்றார்கள், என்று தேசிய இதழ் வெளியிட்டிருந்தது. இதைக்கண்ணுற்றோர்கள் ஆச்சரியத்தக்கதுதானே, ஊர்வலம் சென்றது என்பதற்கும், மசூதி வழியாக மேளவாத்தியங்களுடன் சென்றார்கள் என்பதற்கும் எவ்வளவு வித்தியாசமிருக்கின்றதென்பதை. இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்குப் பாடுபடுவோர்க்கு இவ்வுண்மை விளங்காதிருக்க முடியாதல்லவா!

மகம்மதியர்கள் ஆடம்பரமின்றி மேள, வாத்தியங்களின்றி, ஆடலின்றி, பாடலின்றி மசூதிகளிலே தொழுகை நடாத்துவதாலே, அவ்வழியே அதற்கு முரணான மேள வாத்தியங்களுடன் செல்லுபவர்களை அனுமதிக்கமாட்டார்கள். அதை மீறிச் சென்றதாலே இந்து-முஸ்லிம் கலவரங்கள் பல ஏற்பட்டதைக் கேட்டும் இருக்கின்றோம்—பார்த்துமிருக்கின்றோம். ஆடம்பரமின்றி இறை வணக்கஞ்செய்யும் முஸ்லிம்களுக்கு இடையூறாக, காந்திஜெயந்தி பெயரால் மசூதியை மேளவாத்தியங்களுடனே கடந்து விட்டதாக மமதை கொண்டு மகிழ்ந்து வெளியிடுகிறது தேசிய ஏடு. அங்க எட்டிலேதான் நாட்டிலே மதச்சார்பற்ற ஆட்சி நடப்பதாக மேதைகள் ஆற்றிய மேடைப்பேச்சுகளைப் பொறிக்கக் காண்கிறோம்.

ஈத் தின விழாவில் பசுக்களைக் கொலை செய்த முஸ்லிம்களைத் தண்டித்ததாகச் செய்தித்தாளிலே படிக்கிறோம். அதே தாளிலேயே, கல்கத்தா காளி கோயில் விழாவிற்கு எருமையைக் கொலை செய்யலாமென்று, கல்கத்தா காருண்ய மாஜிஸ்டிரேட் தீர்ப்பையும் படிக்கிறோம். உயிர்ப் பலி விலக்க வேண்டியது இன்றியமையாததே. ஆனால் அதில் மதப்பாகுபாடுகள் எதற்கு? ஈத் விழாவிற்குப் பசுக் கொலை கூடாது. ஆனால் கல்கத்தா காளிவிழாவிற்கு எருமைப் பலியாகலாம்—இதுதானா? மதச்சார்பற்ற ஆட்சி? இப்பொழுதாவது தெரிகின்றதா? நடப்பது இந்துக்கள் (ஆரியர்கள்) ஆட்சி என்று. அப்படி இல்லையென்றால் முதன் முதலாகக் கட்டப்பட்டு, மிதக்கவிடப்பட்ட கப்பலுக்கு ‘ஜல உஷா’ என்ற பெயரை என் இட்டார்கள்? கப்பலைச் செலுத்துவதற்கு முன்னே மதச்சடங்குகள் ஏன் செய்தார்கள்?

ஆகஸ்டு 15ந்தேதி ஏற்க வேண்டிய சுதந்தரத்தை, ஆகஸ்டு 14ந் தேதியே சுதந்திரதினவிழா நடத்தியது ஏன்? August 15 in auspiciousday என்று தான் 14-ந் தேதியே சடங்குகளை நடத்தியதாக இந்துஎழுதிற்றே. ஏன் அதெல்லாம் கூறுவானேன். நம் சென்னை பிரதமர் வானஞர்தியின் பெயரைப்பாருங்கள்! ‘அனுமான் எப்படி இருக்கிறது பெயரின் பொருத்தம்? அஞ்சிலே ஒன்று பெற்று...ஆரியர்க்காக ஏகி” என்று இராமதூதன் அனுமானைப்பற்றி கம்பராமாயணம் கூறுகின்றது. அதேபோல் நம் இராமதூதன் யாருக்காக டெல்லி செல்கிறது? நீங்களே கூறுங்கள்.

ஆரம்பப்பள்ளிகளிலே பயில்கின்ற எல்லா மதக்குழந்தைகளும் படிக்கின்ற ஆரம்பப்படிப்பை அரிச்சுவடி என்று சொல்லும் அளவில்தானே பாடத்திட்டம் அமைந்துள்ளது. வரிச்சுவடி என்று சொல்லிப்போதிப்பதில்லையே. இப்படியாகப் பேதா பேதங்களை அடிப்படையிலே கற்பித்துக்கொண்டே இருக்கின்ற ஆட்சியா மதச்சார்பற்ற ஆட்சி!

“இந்தியா ஒரு வகுப்புவாதமற்ற நாடு-இதற்கில்லை ஈடுஇவ்வுலகில்,” என்றும், “அயல்நாடுகள் இன்னும் உணரவில்லை” என்றும்உளம்வருந்திப் பேசி இருக்கிறார் ஒருவர். சாதாரணமானவரா அவர்? இந்திய சர்க்கார் அரசியல் ஆலோசகர் சர்பெனகல் நரசிங்கராவ், பாரிஸிலே.

சிந்துபாடுகின்றான் சின்னத் தம்பி என்று ஒருவர் சொல்கின்றபோதே சிந்துவா, அது பாக்கிஸ்தானிலுள்ள

ரோஜா முத்தையா

காட்சி 3.

[வீதி.]

உறுப்பினர்:- சின்னான், சின்னாயி.

கதை அமைப்பு:- [சின்னானும், சின்னாயியும் சந்தித்துப்பேசி உடனே கலியாணஞ் செய்து கொள்கின்றனர்.]

சின்னாயி:- தலையில் கூடையும், கையில் வெற்றிலை பாக்குமாக வழியில் நடந்துபோகும் போது, பொடி மட்டையைத் தட்டிக் கொஞ்சம் பொடி எடுத்து மூக்கில் போட்டுக்கொண்டே நடந்து வந்த சின்னான் மீது மோதிக் கொண்டு.]

அடப்பாவி...!

சின்னான்:- சிவசிவா...! கோவிச்சுக்காதீங்கம்மா...!!

சின்னாயி:- அடமாடே... மனுசால் மேலே இப்படி வந்து விழுறியே...உனக்குக் கண்ணுக்கின்னு இருக்கா இல்லியா...?

சின்னான்:- ஊ......ங்! எம்மா! பட்டப் பகலிலேயே இப்படிப் புளுகுறியே... இருட்டா இருந்தா...இன்னும் எவ்வளவு புளுகி இருக்கமாட்டே...?

சின்னாயி:- ஆமாங்...! இப்போ உன் கிட்டே என்னாத்தைப் புளுகிப்புட்டேன்னு இப்படிக்கேக்குறே...?

சின்னான்:- ஆங்...! இப்படிப் பொறுமையாக் கேட்டீன்னாத் தானே சங்கதியைச் சொல்லலாம்...!

சின்னாயி:- சரிசரி. உங்கிட்டே பொறுமையா இருந்து சங்கதி கேட்டுக்கினு இருக்க...எங்க வீட்டுலே ஒன்னுங்கொட்டிக் கிடக்கலே...! மில்லுலே சங்கூதுற நேரமாச்சு வழியை விடு வேலைக்குப் போகணும்...

சின்னான்:- அடடே...! நீ எங்க மில்லாபிசுலேதானே வேலை பாக்குறே...? அப்படின்னா பரவா இல்லை! எங்கிட்டே இருந்து எவ்வளவு நேரம்னாலும் பேசிட்டுப் போ!! நான் அங்கே வந்து சொல்லிக்கிறேன்...

சின்னாயி:- எங்கே வந்து, என்னாத்தைச் சொல்லிக்கிறே...?

சின்னான்:- அங்கேதான்! எங்க நடேசாமில்லிலேதானே வேலை பாக்குறே...! ஆமாங்! உன் பேரென்ன?

சின்னாயி:-என் பேரா? ஏன்...?

சின்னான்:-சொல்லேன்...சொல்றேன்!

சின்னாயி:- '...சின்னாயி...!'

சின்னான்:- என்னா! சின்னாயியா...? சின்னான்... சின்னாயி! சின்னாயி...சின்னான்!! அடடடடா என்னா பொருத்தம்! என்னா பொருத்தம்!! பொருத்தம்னா... இப்படியினா இருக்கணும்...

சின்னாயி:- அடப்பயித்தியமே! பாதையைவிடு, நேரமாச்சு...நான் வேலைக்குப் போகணும்...

சின்னான்:- பாத்தியா, பாத்தியா! மறுபடியும் புளுக ஆரம்பிச்சுட்டியே...?

சின்னாயி:- இந்தா பாரு...! இனிமே, நான் புளுகுறேன் புளுகுறேன்னு சொல்லிப்பே...அப்புறம் நான் ரொம்பப் பொல்லாதவளா இருப்பேன் பாத்துக்கோ...!

சின்னான்:- ஊங்! இப்பத்தான் என்ன! நீ ரொம்ப நல்லவளா இருக்கியோ...? மனுசனைப் பாத்து 'அடமாடேன்னே!' நல்லா இருக்கும் போதே 'அடப்பயித்தியமேன்னு!' புளுகுறே...' ஆங்!

சின்னாயி:- ஓகோ! இதுக்குத் தான், நான் புளுகுறேன் புளுகுறேன்னு நீ புளுகிக்குனு இருக்கியோ...?

சின்னான்:- ஏ சின்னாயி...நான் என்னாயி புளுகுனேன்?

சின்னாயி:- ஏ சின்னான்...... நான் சொன்னா....?

சின்னான்:- என்னா...?

(2) [பாட்டு: 'இது சகஜம்...' என்ற மெட்டு]

சின்னாயி:- ஏய் சின்னான்
ஏய் சின்னான்
கன்னி என்மேல் மனம்
நாடுவதேன் கூறுவாய்? (ஏ)

சின்னான்:- சின்னாயி சின்னாளையே
கண்ணாலம் பண்ணிக்குவாய் (சி)

சின்னாயி:- என்னோடு நீயே
வீதியில் இனிமே
மோதினால்மாட்டேன் நானே (ஏ)

சின்னான்:- கண்ணோடு கண்
ணே பேசிடும் இனிமே
மோதிட மாட்டேன் நானே (க)

சின்னான் & சின்னாயி :- சின்னானும் சின்னாயுமே
கண்ணாலம் பண்ணிக்குவோம்' (சி)

காட்சி. 4.

[சோலை.]

உறுப்பினர்:- இராஜன், விமலா.

கதை அமைப்பு:- [மாலையிலோர் சோலையிலே சந்திக்கும் காதலர் மனங்களிலே கனிவு.]

(3) [பாட்டு: 'ஆயே திவாளி...' என்ற மெட்டு]

விமலா:- நூதனமாமே நூதன
மாமே (நூ)
நாடுது மனம்
ராஜனைத்தானே—அவர்
கோத்திரம் குலமறிந்திடாதே
தான் (நூ)

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

தாயிற்றே என்று வினாவும் படியான அரசியல் புரளிக்காலத்திலே, வகுப்பு வாதமற்ற நாடு இந்தியா என்று பாரிஸிலே பகரும் நரசிங்கருக்குப்பின்னே ஏவல் எதற்கு? என்று கேட்கத் தோன்றாதா? மதிப்புக்குரிய மந்திரிகளுக்குப் பின்னே, செட்டியார் ரெட்டியார் என்ற வகுப்புவாதத்திற்கு வழிகாட்டும் வால்கள் எதற்கு? என்று கேட்கத் தோன்றாதா? எழுச்சியை அடக்கு முறை ஆளமுடியுமா? சிந்திக்கவேண்டாமா, சீறுகின்ற மக்கள் தலைவர்கள்.

கதை கற்பனை.

சிறுகதை

இரண்டாம் பருவம்

கொலைக் குற்றவாளி.

போட்டி

என் 11.

"தர்மு! சென்ற வாரம் வரை சுதந்தரப் பறவையாக சுற்றி விளையாடிய நான், கிடைத்தவரை உண்டு களித்து உல்லாசமாய் உன்னுடன் உலவிய நான், இன்று சர்க்கார் விருந்தாளியாகச் கூண்டிலே அடைபட்டுக் கிடக்கிறேன். தர்மு! உன்வீட்டில் சூரியனும், வருணனும் தாராளமாக வந்து விளையாடுவார்கள். ஆனால் அவர்கள் இங்கு வரமுடியாது. நீ அங்கு புழுங்கலரிசிக் கஞ்சி வைத்துக் கொடுப்பாய். ஆனால் இங்கு ஒரு வேளை சோளக் கஞ்சி கிடைத்தாலும், இரு வேளை சாப்பாடு கிடைக்கிறது. உன்னுடனிருக்கும் போது நான் கட்டியிருந்த உடை கந்தையாக இருக்கும். ஏழெட்டுத்தையல்கள் இருக்கும். உடுத்தியிருந்தால் உடலெல்லாம் தெரியும். ஆனால் இங்கு அந்தக்கவலை இல்லை. அதுவரை நான் பாக்கியம் உடையவன்தான். எல்லாம் இருந்தும் என் இறக்கைகள் ஒடிக்கப்பட்டனவே அது தானே பெரிய வேதனை. தர்மு! 'ஏன் என்னை இங்கு கொண்டு வந்து அடைத்து விட்டார்கள்' என்று கேட்கின்றாய்?"

"தர்மு! களங்கமற்ற உள்ளத்தோடு உன்னையும் உன் மகனையும் காதலித்தேன். மகனுக்கும் மனைவிக்கும் செய்யவேண்டிய கடமையைச்செய்யக் காலமெல்லாம் கஷ்டப்பட்டேன். மது மரம் ஏறினேன். மார்புழுறிய உழைத்தேன். உழைத்து உழைத்து உருமாறினேன். நீ அறிவாய் என் உள்ளம் எவ்வளவு பரிசுத்தமானது என்று. ஆனால் நான் இன்று குற்றவாளி. சாதாரணக்குற்றவாளியல்ல, கொலைக் குற்றவாளி. தர்மு! இன்றுதான் உன்னுடன் பேசிக்கொண்டிருக்கிறேன். நாளை நீ என் உடலைத் தூக்குமேடையில் காண்பாய். கண்ணே அழாதே. நாளைக்கு நீ இன்னும் அழப்போகிறாய். கதறுவாய், கண்ணீர் வடிப்பாய், தரையில் கிடந்து புரளுவாய், மண்டையை மோதிக்கொள்வாய். எல்லாம் எனக்கு நன்றாகத் தெரிகிறது. ஆனால் ஒன்றுக்கும் அஞ்சாதே."

"தர்மு! இன்று உன்னோடு முத்தம் கொடுக்கும் நான், நாளை சாவோடு முத்தமிடப்போகிறேன். நீ உன்னைக் காப்பாற்றிக் கொள்ளவழிதேடு. நான் ஏன் குற்றவாளியானேன் என்று கேட்கின்றாயா? அது உனக்கு விந்தையாக இருக்கும். தர்மு! மது மரம் ஏறி, அறுபது ரூபாய் வருமானத்தில் உன்னை நலுங்காமல் காப்பாற்றி வந்தேன். மக்களுக்கு மதுவால் கேடு வருவதை ஒழிக்க மதுவை ஒழித்து, சர்க்கார், மது மரத்தொழிலாளிகளின் வயிற்றில் அடித்து விட்டது என்பது உனக்குத் தெரியும். களிப்போடு வாழ்ந்த நாம் சலிப்போடுவாழ்வதா என்று நினைத்த நான் உன் ஒரு பவுன் காப்பை விற்று, வெற்றிலை பாக்குக்கடை வைத்தேன். ஒரே காலத்தில் மதுமரமேறிய தோழர்கள் பலரும் இத்தொழிலை மேற்கொண்டதால் எல்லோரும் விரைவிலேயே கடையை மூடிவிட நேர்ந்தது, என்பது உனக்குத் தெரியாது. உடனே வேலையற்றுத் துன்புறும் எல்லா மது மரமேறிய தொழிலாளிகளையும் ஒன்றாகச் சேர்த்தேன். எங்களுக்கு வேலை கொடு! என்று சர்க்காரைக் கேட்க சங்கத்தைக்கூட்டினேன். நாங்கள் கூட்டமாக அரசாங்க நிலையத்தின் முன்னின்று எங்கள் கோரிக்கையைக் கூறினோம். நான்தான் தலைமை வகித்தேன். அரசாங்கம் கண்ணீர்ப் புகையை உபயோகித்து எங்களைக் கலைத்தது. ஒன்றிரண்டு கோழைகளால் சங்கமும் கலைந்தது. ஆனால் என் உள்ளம் மங்கிவிடவில்லை. திராவிடர் கழகப் பொதுக்கூட்டங்களில் என் இனத்திற்காக அரசாங்கத்துடன் வாதாடிப் பேசிப்பார்த்தேன். அரசாங்கத்திடமிருந்து எச்சரிக்கை வந்தது. அரசாங்கம் என் பேச்சை செல்லாக் காசாகச் செய்தது. என் பேச்சிற்குத் தடைவிதித்து. தர்மு! நீ படித்த பெண்ணல்ல, பத்து மைல்களுக்கப்பால் பட்டிக்காட்டில் வசிக்கிறாய். உன் அண்டை வீட்டுப் பெண்களும் படித்தவர்களல்ல, பத்திரிகையைப் படித்துச் சொல்ல. உன் முகம் வாடக்கூடாதே என்று நினைத்த நான் எங்கெங்கோ வேலைக்காக அலைந்தேன். சில நாள் உழுதேன். அது என் உடலுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. இறுதியில் சில நாள் விறகு வெட்டினேன். கோடரிவிறகுக்குப்பதில் என் காலைப் பிளந்தது. உன்னிடம் மாடு தவறி மிதித்து விட்டதாகக் கூறினேன். இதெல்லாம் எதற்கு? விதவையாயிருந்த உன்னை விரும்பி மணமுடித்தேன். காதல் பசி தீர்ந்ததும்கைவிட்டானே கயவன் என்று நீ என்னை நிந்திப்பாய் பார், அதற்காகத்தான், இத்தனை பாடுபட்டு உன்னைக் காப்பாற்றி வந்தேன். கால்வயிற்றுக்காவது உணவளித்து வந்தேன். அதுவும் நாளையோடு உன்பொறுப்பாய் மாறப்போகிறது"

"தர்மு! ஒருநாள் வேலையே கிடைக்கவில்லை. வயிறோபசிக்கிறது. கையிலோ காசு கிடையாது. என்ன செய்வது? என்ன ஆனாலும் சரி என்று நினைத்த நான், ஒரு ஹோட்டலுக்குச் சென்று 4 அணாவிற்குச் சாப்பிட்டேன். உனக்கு ஒரு 4 அணாவிற்குத் தின்பண்டங்கள் வாங்கிக் கொண்டு வந்து, முதலாளியருகில் வந்ததும் மேல்துண்டை யருகில் வைத்து "அய்யா, இதைப்பார்த்துக் கொள்ளுங்கள் என் நண்பரிடம் பணம் இருக்கிறது வாங்கிவருகிறேன்" என்று சொல்லி வெளியே ஒரு பர்லாங்தூரம் வந்து விட்டேன். எவனோ என் போன்ற அன்னக்காவடி, எனக்கு முன்பு ஒருகால் இம்மாதிரி செய்து விட்டுப் போனானோ என்னவோ, அந்தக் கடைச்சிப்பந்தி என்னைத்தொடர்ந்து வந்து இழுத்துக் கொண்டு போய்விட்டான். கடைகாரப்பார்ப்பன முதலாளி "இதைவிடப் பிச்சை எடுக்கலாமே என்று என்னென்னமோ வசைமொழி கூறினான். அது எனக்கு இசைமொழியாகப்பட்டது. உள்ளூரில் பிச்சை எடுத்தால்தானே "அந்தப் பயல் பிச்சை எடுக்கிறாண்டோய்" என்று ஏளனம் செய்வார்கள். கண்ணுக்கெட்டாத தூரத்தில் போய்விட்டால்...யாருக்கு என்ன தெரியும் என்று நினைத்த நான், மாயவரத்தில் எனக்கு வேலை கிடைத்திருக்கிறது என்று உன்னிடம் சொல்லிப்போனேன்."

"அங்கே நான் செய்தது என்ன? துணியை எண்ணெயில் நனைப்பேன். கை, கால்களில் 5, 6 இடங்களில் கட்டுவேன். கூட்டம்கூடும் இடங்களில் உட்கார்ந்து விடுவேன். "நடக்க முடியாத பிறவியப்பா, நாராயணா"

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க)

தோழர்களே.

இதற்குமுன் 10 கதைகளையும் படித்தீர்களா?

இதையும் படியுங்கள்!

இன்னும் 2 கதை பிரசுரிக்கப்படும்.

அதையும் படியுங்கள்!

பிறகு தீர்ப்புக் கூறுங்கள்!

இராவண காவியம் எதற்கு?

"கோங்கிளங்கோ"

★

சென்ற வாரத் தொடர்ச்சி.

தங்கையை உருக்குலைத்துக் கொன்ற கயவனைக் கட்டில் செய்து பொருதழிக்காது, "வெட்சிநிரைகவர்தல்" என்னும் புறப்பொருட்படி, பகைவர் மாடுகளையும், மனைவி மக்கள் போன்ற இன்றியமையாத பொருள்களையும் கவர்ந்து வந்து பாதுகாத்து, அவர் தேடிவரின் நல்லறிவு புகட்டியனுப்புதலோ, பொருது வெல்லுதலோ செய்யும் தமிழர் போர் முறைப்படி இராவணன் சீதையை எடுத்து வந்து அசோக வனத்தில் வைத்துப் பாதுகாத்து வந்தானேயன்றி, அவள் மீது காதல் கொண்டு எடுத்துவரவுமில்லை, அவளைத் துன்புறுத்தவுமில்லை. வேண்டுமென்றே இராவணன்மீது பிற்காலத்தவர்க்குக் கெட்ட எண்ணம் உண்டாகும் பொருட்டு அவளைத் துன்புறுத்தினதாக, கற்பழிக்க வலுவந்தம் செய்ததாக எழுதி வைத்தனர் ஆரிய வான்மீகியார். தமிழ்க் கம்பனாரோ அதைத் தன் கவித்திறத்தால் தமிழ் மக்கள் மனத்தில் நன்கு பதியும்படி செய்து ஆழ்வார்ப்பட்டமும், 'கல்வியில் பெரியவர்' என்னும் பட்டமும் பெற்றுவிட்டனர். இவ்வுண்மையறியாது, ஓரில்லாள் கொள்கையுடைய இராவணனை, "உலக மாதாவாகிய சீதாபிராட்டியாரைக் கற்பழிக்க வலுவந்தம் செய்த கயவன்", "திருமகளைராமபிரானிடத்திலிருந்து பிரித்து எடுத்துவந்த கொடியன்" என்றெல்லாம் தூற்றித்திரியும் தமிழ் மக்களுக்கு உண்மையறிவுறுத்தவேயாகும். இவ்வளவு நாளாய்த் திட்டினது போக, இனியாகிலும் உத்தமனாகிய இராவணனைப் பழியாதிருப்பதற்கேயாகும்.

ராமன் இராவணனை நேரிடையாக எதிர்த்து வெல்லவில்லை. விபீடணன் உளவாளியாக இருந்தான். நீலன் முதலிய படைத்தலைவர்கள் பெரும்படையுடன் எதிரியுடன் சேர்ந்துகொண்டனர். மருந்துக் கிடங்கில் தீவைத்துச் சென்ற கொடியவன் செயலை எண்ணி மனங்கொதித்து, அத்தீயை அவித்துக் கொண்டிருக்கும்போது ஊரை முற்றுகை யிட்டனர் எதிரிகள். இந்திரசித்துத் தனியாகப் பொருதுகொண்டிருக்கும் போது, அனுமான், லக்குவன், விபீடணன், சுக்ரீவன் முதலிய பலரும் சென்று வளைத்துப்பொருது கொன்றனர். இராவணன் இலக்குவனிடம் பொரும்போது இராமன் குறுக்கே சென்று அம்பெய்து கொன்றனன். உண்மை யிவ்வாறிருக்க, இராவணன் படைகள் அத்தனையும் இறந்தொழிந்தன. இராமன் படைகள் ஒன்று கூடச் சாகவில்லை. எல்லோரும் உயிர்த்தெழுந்தனர். இராமன் அம்புக்கெதிர் நிற்கமுடியாமல் இராவணன் இறந்தான். புண்ணியம் பாவத்தை வென்றது. தேவர்களைத் துன்புறுத்தி வந்த கொடிய வல்லரக்கனை ராமபிரான் கொன்று அவர்களைக் காத்தனன். ஒழிந்தான் அரக்கன். அரக்கர் பூண்டை அடியோடொழித்த ரகுராமன் வாழ்க. "ரகுபதிராகவ ராஜாராம், பதிதபாவன சீதாராம்" என்று நாமாவளி பாடும் தமிழர்களுக்கு உண்மையை யுணர்த்தவேயாகும்.

இன்ன பல உண்மைக்கு மாறான பொய்க்கூற்றுக்களைப்புனைந்துரைத்துத் தமிழ் மக்களை நம்பும்படி செய்து ஆரிய ஆதிக்கத்துக்குத் தமிழ் நாட்டில் அடிகோலிய ஆரியச் சூழ்ச்சியை எடுத்துக்காட்டி ஆரிய ஆதிக்கத்தைத் தமிழகத்தினின்றுஅகற்றவேஇராவண காவியம் செய்யப்பட்டது. இராவணன் தமிழரின் மாபெருந் தலைவன். விந்த முதல் குமரிவரை ஒருமொழி வைத்தாண்ட தமிழ் மன்னன். தண்டமிழ்வேலித்தமிழகத்தே ஆரியத்தொத்து நோய்புகாமல் தடுத்துநின்றதனித் தமிழ்வேந்தன். தமிழ்நாட்டை, தமிழை, தமிழரைக் காக்கத் தனிக்களத்தொழிந்த தன்மானத் தமிழன். அரக்கர் என்றவர் எல்லாம் தமிழர்கள்தான். சென்ற உலகப் பெரும் போரில் ஜப்பானியரை நாம் ஜப்பானிய அரக்கர்கள் என்று கூறினது போல, வலியவர்களாகிய எதிரிகளை ஆரியர் அரக்கரென்று அழைத்தனர். கொடிய இழி குணங்களை யெல்லாம் கற்பித்தனர். நெடுநாட் பிரசாரத்தால், கம்பன் கவியைக்கொண்டு தமிழ் மக்களை நம்ப வைத்துவிட்டனர். ஏமாந்த தமிழர்கள் தங்கள் முன்னோரை அரக்கரென்றும், தங்களுக்குப் புறம்பானவரென்றும், கொடியவரென்றும் கொள்ளலாயினர். தமிழர் குலப்பகைவர்களாகிய ஆரியர்களை நல்லவர் என்றும் தங்கள் முன்னோர்களைக் கெட்டவரென்றுங் கூறலாயினர். ஆரியர் கூற்றுக்கு ஆமாம் சாமி போடலாயினர். இம் மயக்கவுணர்வை மாற்றி இராவணன் முதலியோரைத் தமிழர்களெனத் தமிழர் உணரும்படி செய்யவே இராவண காவியம் செய்யப்பட்டது. ஆரிய ராமன் தமிழர்குலப் பகைவனென்றும், தமிழர் தலைவனை வஞ்சித்துக் கொன்ற தறுதலையென்றும், தமிழரைக்கொன்றே தமிழர் தலைவனை வென்று தமிழ் நாட்டில் ஆரிய ஆதிக்கத்தை நிலைநாட்டிய அறக்கொடியோனென்றும் தமிழ்மக்கள்உணர்ந்து, அக்கொடியோனைத் தெய்வமாக வணங்கி வரும் அறியாமையினீங்கி, அறிவுபெறும் பொருட்டே இராவண காவியம் செய்யப்பட்டது.

இனி வாலி, சுக்ரீவன் முதலியவர்களும் குரங்குகளல்லர். தமிழ் மக்கள் தான். இராவணன் முதலியோரை அரக்கர் என்றதுபோல், அனுமான் முதலியோரைக் குரங்குகள் என்றனர் ஆரியர். பண்டித ஜவகர்லால் நேரு தன் மகளுக்கு எழுதிய கடிதங்களில் [177ம் பக்கம்] "இராமயணப் போர் ஆரியர் திராவிடப்போரேயாகும். தென்னாட்டில் வாழ்ந்த திராவிடர்களைத் தான் 'குரங்குகள்' என்றனர்" என்று உண்மையை வெளியிட்ட பிறகும், எத்தனையோ அறிஞர்கள் இவ்வுண்மையை வெளியிட்டு வந்திருந்தும் விடாப்பிடியாக இன்றும் இராவணன் முதலியோரை அரக்கர் என்றும், வாலி முதலியோரைக் குரங்குகளென்றும் கூறிவருவதும், நாடகத்தில் அவ்வாறே கோலமிட்டு நடிப்பதும், படமெடுப்பதும் ஆகிய தறுதலைக் கொள்கையை மாற்றி, இராமாயணப் போர், ஆரிய திராவிடப் போர். அரக்கர், குரங்குகள் என்பவரெல்லாம் தமிழர்கள்தான். தமிழர்களைத்தான் வஞ்சநெஞ்ச ஆரியர்கள் அவ்வாறு எழுதிவைத்தனர் என்னும் உண்மையைத் தமிழ் மக்கள் உணரும்படி செய்து, தமிழ் நாட்டினின்று ஆரிய ஆதிக்கத்தை அகற்றவே இராவண காவியம் செய்யப்பட்டது. உண்மையாகவே கம்ப ராமாயணம் படிப்பதில் நூற்றில் ஒரு பங்கு தமிழர்கள் இராவண காவியம் படிக்கத் தொடங்குவார்களானால் அன்றே ஆரிய ஆதிக்கம் தமிழ் நாட்டைவிட்டு

இந்தி எதிர்ப்பு மறியல்.

35ம் நாள் போர்.

சென்னை, நவ 19.

இன்றும் வழக்கம்போலவே முத்தியாலுப் பேட்டைக் கழகத் தலைவர் வீட்டிலிருந்து தோழர்களான அலமேலு அம்மையார், கலைச்செல்வன், சாளைகபீர், திராவிடமணி, பாண்டியன் ஆகிய அய்ந்து தொண்டர்களும் புறப்பட்டு பல தெருக்கள் வழியாக வந்து பள்ளிமுன்பு 9-30 முதல் 10-30 வரை மறியல் செய்தனர்.

மாணவர்கள், தொண்டர்களுக்குப் பானங்கள் வழங்கி, மாலையணிந்து இந்திபடியோம் எனப் பேரொலி செய்தனர். வழக்கம் போலவே பொதுமக்கள் கூட்டமும் மறியல் இடத்தை நெருங்கவிடாமல் போலீஸார் பார்த்து வந்தனர்.

ரோஜா முத்தையா

இந்தி எதிர்ப்பு மறியல்.

36ம் நாள் போர்.

சென்னை நவ 20.

இன்றும் 9-30 முதல் 1-மணி நேரம் வரை முத்தியாலுப்பேட்டை கிளைப் பள்ளியின் முன்பு அமைதியான மறியல் நடைபெற்றது.

மறியல் செய்யுமிடத்தில் பார்வையாளர்கள் நிற்பதை இன்று போலீசார் தீவிரமாகத் தடுத்தனர்.

தொண்டர்கள் வரும் போதும் செல்லும் போதும் எதிர்ப்பொலிகளோடு தான் சென்றனர். மக்களும் அவர்களைப் பின்பற்றத்தான் செய்தனர்.

அருண்டோடுமென்பதில் எள்ளளவும் அய்யமில்லை. இவ்வுண்மையை உள்ளபடி அறிந்ததால்தான் தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள் தமிழ் அமைச்சர்களிடம் சொல்லி அதைப் பறிமுதல் செய்யும்படி செய்தனர். உண்மையுணராத அப்பாவித் தமிழ் அமைச்சர்கள் பார்ப்பனர் பேச்சைக் கேட்டுத் தன் கண்ணையே குத்திக்கொள்வது போல் காவியத்தைப் பறிமுதல் செய்துவிட்டனர். பறிமுதல் செய்துவிட்டால் இராவண காவியத்தைத் தமிழர் அறியாமல் செய்து விடலாம் என்று 'பி. ஸ்ரீ.' போன்றவர்கள் எண்ணுவது வீண் கனவேயாகும். தமிழ் மக்களின் புறத்தேயுலவிய இராவண காவியம் இப்போது அகத்தே உலவுகிறதென்பதை ஆச்சாரியார் போன்றவர் அறியட்டும்.

'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற தமிழர் கொள்கை எதனால் கெட்டது. எற்றத் தாழ்வான ஆயிரமாயிரங் குலங்கள் எதனால் உண்டாயின? தீண்டாமை, பாராமை, செல்லாமை முதலிய பொல்லாமைகள் எதனால் உண்டாயின? அண்டிப்பிழைக்க வந்த ஆரியப் பார்ப்பனருக்குச் 'சாமி' என்னும் உயர்நிலையும், நாடாண்டு வந்த தமிழர்க்குச் 'சூத்திரர்' என்னும் இழிபெயரும் என் வந்தன? பார்ப்பனர் உழையாமல் இருந்து உடல் கொழுக்க உண்ண, தமிழர் ஓயாமல் உழைத்தும் ஊணின்றி உடல் மெலிந்துழல்வானேன்? பார்ப்பனர் நூற்றுக்கு நூறு பேர் கற்றவராயிருக்க, தமிழர் நூற்றுக்கு நூறு பேரும் கல்லாத் தற்குறிகளாய் இருக்கக் காரணமென்ன? பொதுவாகத் திருமால் என்னும் பெயர்கூட மறைந்து ராமன், கிருஷ்ணன் ஆகிய தமிழ்ப்பகைவர்கள் தமிழர் கடவுளானதேன்? தவஞ்செய்த 'சம்புகன்' என்னும் தமிழனைக் கொன்றவனும், தமிழர் குலப்பகைவனும், தம்பிக்குரிய நாட்டைப் பெறப் பல்வகைச் சூழ்ச்சி செய்தவனுமான ராமனை, நமது முதலமைச்சர் முதல் தமிழர் தலைவர் என்போரெல்லாம் நல்லனெனக்கொண்டு, அவன் பெயரால், 'ராமராஜ்யம்' அமைக்கவேண்டும் எனக் கூறிவருவதென் காரணமென்ன? கம்பராமாயணத்தால் ஏற்பட்ட ஆரிய அடிமை மனப்பான்மைதானே? இவ்வடிமை மனப்பான்மையைப் போக்கவே இராவண காவியம் செய்யப்பட்டது.

கம்பராமாயணம் ஆரியராமனையும், ஆரிய நாட்டையும், ஆரியர் பெருமையையும், ஆரியர் கொள்கைகளையும் புகழ்வதன் மூலம் தமிழர்களுக்கு ஆரியர் மீதும், ஆரிய நாடாகிய வடநாட்டின் மீதும் பற்றையுண்டாக்கி, தமிழ் நாட்டின் மீது பற்றின்மையை உண்டாக்குவதால், தமிழ்நாடு வடநாட்டுக்கடிமையாய் இருந்து அலைந்து வருவதால், அவ்வடிமை நிலையைப் போக்கவே இராவண காவியம் செய்யப்பட்டது.

இராவணன் காலத்தே விந்தமுதல் குமரிவரை வாழ்ந்த தமிழர்கள், தமிழ்ச் சிற்றரசர்கள், பேரரசர்கள், தண்டமிழ்ப் பெண்டிர்களெல்லாம், ஆரிய அடிமையாகிய கம்பரால் தமிழர் வாயால் சொல்லவே முடியாத அவ்வளவு இழி தன்மையாகப் பழித்துக் கூறியிருக்கும் பழிப்புரையைப் போக்கி, இராவணன் முதலியோரது பெருமையும், அக்காலத் தமிழ் மக்களின் சீரும் சிறப்பும் நிரம்பட எடுத்துக் காட்டுவதன் மூலம் தமிழ் நாட்டின் வரலாறு இடையறாமல் தொடர்ந்து நடைபெறும் பொருட்டே இராவண காவியம் செய்யப்பட்டது.

அனுமான், சுக்ரீவன், விபீடணன் போன்ற கொடுந் தமிழர்கள் செய்த ஆரிய அடிமைத் தொழிலை, தமிழிரண்டகச் செயலை, மானங்கெட்ட மறச்செயலை எடுத்துக்காட்டி, அன்னாரின் அய்ந்தாம்படை வேலையால் ராமன் வெல்லவும், இராவணன் தோற்கவும் ஆனதேயன்றி ராமன் தனியாக எதிர்த்து வெல்லவில்லை. அசகோடரிக் காம்புகளின் இரண்டக ஈளவு வேலையால் ராமனுக்குக் கிடைத்த வெற்றியை உண்மையான வெற்றியெனக் கொண்டு ராமனைப் போற்றும் தமிழ் மக்களின் திரிபுணர்ச்சியைப் போக்கவும், ஆரியர் வென்றார், தமிழர் தோற்றார் என்னும் அடாமொழியை அகற்றவுமே இராவண காவியம் செய்யப்பட்டது.

நமது முன்னோர்களைப் பழித்தும், நமது குலப்பகைவரான ஆரியர்களைப் புகழ்ந்தும் எழுதப்பட்ட கம்பராமாயணத்தைத் தமிழரிடத்திலிருந்து ஒழித்துத் தமிழ் மக்கட்கு மானவுணர்ச்சியையுண்டாக்கவே, தங்கள் முன்னோர் பெருமையைப் படித்து இன்புறவே, தமிழரைப்பழித்த, தமிழ்மக்களை ஆரியர்க்குக் காட்டிக் கொடுத்த, ஆரிய அடிமையும் இனவிரண்டகனுமான கம்பர் மாநாடு நடத்தும் கயமையைப் போக்கவே, கம்பன் பெயரைச் சொல்லிக் காலந்தள்ளும் கயவர் வாழ்வைத் தொலைக்கவே, 'ஸ்ரீ' போன்றவர்களின் வாய்க்கொழுப்பையும், மனக்கிறுக்கையும் போக்கவே இராவண காவியம் செய்யப்பட்டது.

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் பிறந்தநாள்கொண்டாடுவதில்லை. காரிகால் சோழன் பிறந்தநாள் கொண்டாடுவதில்லை. செங்குட்டுவன் பிறந்தநாள் கொண்டாடுவதில்லை தமிழ் நாட்டில் தமிழ் மக்களால்! ஆனால், கம்பராமாயணத்தால் ஏற்பட்ட ஆரிய மோகத்தால், ராமன் பிறந்த நாளை ராம நவமி எனக் கொண்டாடிவருகின்றனர் தமிழ்மக்கள். இம்மானங்கெட்ட நிலையைப் போக்கவே, ராமன் பெயர் தமிழ் நாட்டில் ஒரு தமிழனாலும் உச்சரிக்காமல் மறைந்தொழியும்படி செய்யவே இராவணகாவியம் செய்யப்பட்டது.

தமிழர் பண்பாட்டைப் போக்கித் தமிழ்மக்களை ஆரியநாகரிகத்திற்கு அடிமையாக்கி, ஆரிய ஆதிக்கத்தைத் தமிழ் நாட்டில் நிலைநாட்டி, ஆரியர் உயர் மக்களாகவும், தமிழர் தாழ்மக்களாகவும் வாழும்படி செய்த வடவாரிய ராமன் பிறந்தநாளை இவ்வளவு நாளாய்க் கொண்டாடிவந்த தீச்செயலின் கழுவாயாக, அப்பெண் கொலைப் பாவியைக் கோயில் கட்டிக் கும்பிட்டு வந்த குற்றநீக்கமாக, அக்கொடியோன் பெயரை நம்பெயராக வைத்து வழங்கி வந்த இழிவு நீக்கமாகத் தமிழ்ப் பெரியார்கள் பிறந்த நாளைக் கொண்டாடவும், தமிழ்ப் பெரியார்களைப் போற்றவும், தனித்தமிழ் பெயர்களையே இனித்தமிழர்கள் வைத்து வழங்கவும், பழையபடி தமிழ்ப்பண்பாடு தழைத்தோங்கும்படி செய்யவுமே இராவண காவியம் செய்யப்பட்டது.

கம்பராமாயணத்தால் ஏற்பட்ட ஆரிய மோகத்தால், ஆரியமொழி தமிழ் நாட்டில் ஆதிக்கம் பெற்றுத் தமிழ் மொழியைச் சீர் குலைத்து விட்டது. ஆரிய மயக்கமருந்துண்டு மயங்கிய தமிழர்கள், ஆரியக்கலப்பால் தமிழ் வளரும் எனும் ஆரியப்பார்ப்பனர் பொய்யுரையை மெய்யுரையென நம்பி, அளவு கடந்த ஆரியச் சொற்களைக் கலந்து தனித் தமிழ்ப் பண்பாட்டைக் கெடுத்து விட்டனர். ஆரியக்கலப்பாலேயே தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய தமிழ்மொழிகள் வேறு மொழியாயின. அம்மொழி பேசுவோர் வேறு மக்களெனத்

(தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க)

இந்தி எதிர்ப்பு மறியல்.

37-ம் நாள் போர்.

சென்னை நவ 22.

வழக்கம்போலவே இன்றும் முத்தியாலுப்பேட்டைப் பள்ளியின் முன்பு அய்ந்து தொண்டர்களின் ஒரு மணி நேர மறியல் நடந்தது.

டாக்டரின் ஜாதிப் பித்தம்!

[✱]

"யார்ப்பா நீ? எங்கே வந்தே?"

"தங்களிடம்தான் வந்தேன். டிரைவர் வேலையொன்று தங்களிடம் காலியிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அதைக் கேட்டுவிட்டுப் போகலாம் என்று வந்தேன்"

"இதற்கு முன் எங்கே வேலை செய்துகொண்டிருந்தாய்?"

"மிலிடரியில்"

"எத்தனை வருஷம் சர்வீஸ்"

"அய்ந்து வருஷம்"

"சர்டிபிகேட் எல்லாம் வாங்கியிருக்கிறாயா?"

"எல்லாவற்றையும் கொண்டு வந்திருக்கிறேனுங்க"

"சரி! நீ...எந்த வகுப்பு?

"............புரியவில்லைங்க?"

"அதுதானப்பா.......நீ என்ன சாதி"?

"கிருஸ்தவனுங்க"

"என்ன கிருஸ்தவன்?"

"ரோமன் கத்தோலிக்"

"ரோமன் கத்தோலிக் என்பது சரி! ரோமன் கத்தோலிக்கிலேயே அப்படி இப்படின்னு இருக்கிறதல்லவா? அதில் நீ எது?"

"ஏதோ எனக்குத் தெரியாதுங்க"

"உங்கப்பன் என்ன சாதி?"

"அவரும் கிருஸ்தவருதான்"

"அவரு கிருஸ்துவ மதத்தில் சேராததற்கு முன்பு?"

"அது தெரியாதுங்க"

"இதெல்லாம் ஏன் கேட்கிறேன் என்றால்—நீ கார் ஓட்டுவது சரி. நம்ம பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள். அவர்களுக்குச் சாப்பாடு காரிலேயே கொண்டு போய் விட்டுத் திரும்பி வரவேண்டும்"

"அதற்கென்ன—நான் செய்கிறேனுங்க"

"நீ செய்கிறது சரி! கிருஸ்துவ மதத்தில் சேருவதற்கு முன் நீ என்ன சாதி என்று தெரியவேண்டுமே? முதலில் நீ அதைத்தெரிந்து கொண்டு வா!"

இந்தக் கேள்விகளையும் பதிலையும் பார்த்தவுடன் விளங்காமல் போகாது, எப்படிப்பட்ட இருவரிடையே இதுபோன்ற உரையாடல் நடந்திருக்கும் என்று. பழுத்த வைதீகக் குடுக்கை ஒருவருக்கும், வேலை தேடிவந்த பாமரன் ஒருவனுக்கும் இதுபோல நடந்திருக்கும் என்பதில் சிறிதும் அய்யமில்லை.

ஆனால் உண்மையில் எப்படிப்பட்ட இருவரிடையே உரையாடல் நடந்தது என்று சொன்னால் பலருக்கு நம்பிக்கை உண்டாகத்தான் செய்யாது.

வைதிகப் பாரம்பரையில் ஊறி வளர்ந்த வைத்தினாதய்யர் கும்பலைச் சார்ந்தவரோ, சைவப் பழமாகக் கருதப்படும் தம்பிரான் சுவாமிகளோ, சாதிகள் ஒழிந்தால் தரணியில் நாங்கள் வாழமாட்டோம் என்று கூறித்திரியும் குள்ளநரிக்கும்பலோ கேட்டிருக்குமானால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால் அரசியல் வாழ்விலே பல ஆண்டுகள் தன் வாழ்வைக் கழித்து, படித்து டாக்டர் பட்டம் பெற்ற, மாஜி காங்கரஸ் தலைவர், மாஜி ஹிந்து மகா சபைத் தலைவர், டாக்டர் வரதராஜலு நாயுடு கேட்கிறார் நாம் மேலே காட்டியபடி! காங்கரஸின் லட்சியப்பாதையிலே பல ஆண்டுகள் பயணம் செய்த—அவர் கேட்கிறார்! இந்த நாட்டிலே சாதியிருக்கக் கூடாது என்று மூலைமுடுக்குகளிலெல்லாம் சல்லடம் கட்டிப்பேசிய அவர் கேட்கிறார் அதுபோல. சுதந்தரம் வந்த பிறகு சாதியேயிருக்காது என்று அன்று பேசிய அவர் கேட்கிறார்—எதை ஒழித்து விடுவோம் என்று பேசினாரோ அதை! சாதிகள் இருக்கக்கூடாது என்று மேடைகளில் பேசும் போதே—வேறு தோழர்களின் பெயரைச் சொல்லும்போது—அந்தத் தோழரின் சாதி எவருக்குமே தெரியாதிருக்கும்போது—தனக்குத் தெரியும் என்ற காரணத்தால்—அவரின் சாதியைக் குறிக்கும் பட்டத்தையும் கூடச் சேர்த்து அவரின் பெயரைச் சொல்லும் அவர்—இன்னும் தன் பெயருக்குப் பின் வரும் நாயுடு என்ற வாலை வெட்டிக்கொள்ளவே விரும்பாதிருக்கும் ஸ்ரீமான். வரதராஜலு நாயுடு அவர்கள் அதுபோலக் கேட்பதில் ஆச்சரியம் என்ன இருக்க முடியும்? என்று நமது தோழர்கள் நினைக்கலாம். நாமும் அதற்கு ஆச்சரியப்படப்போவதில்லை.

மேலே நாம் காட்டிய உரையாடல், திரு. வரதராஜலு நாயுடு அவர்களைத் தாக்க வேண்டும் என்ற எண்ணத்தால் கூட்டிய கற்பனையல்ல. முற்றிலும் உண்மை. இதைவிடச் சற்று அதிகமாகவே அவர் கேட்டிருக்கிறார். சின்னாட்களுக்குமுன்பு சேலம் மாவட்டம், திருச்செங்கோட்டையடுத்த ஒரு கிராமத்தைச் சார்ந்த கந்தசாமி என்ற ஒரு தாழ்த்தப்பட்ட தோழர் ஒருவர், டாக்டர் அவர்களிடம் டிரைவர் வேலையொன்று காலியிருப்பதாகக் கேள்விப்பட்டு, சென்று கேட்டாராம்! பல இடங்களிலும் வேலை தேடிச் சென்று, தன் சாதியைச் சொன்ன காரணத்தால்—அது தாழ்ந்த சாதியாக இருப்பதால், எவரும் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டனராம். கிருஸ்துவன் என்று சொன்னாலாவது ஏற்றுக்கொள்வார்களா(?) என்று எண்ணிக் கூறியபோது தான் டாக்டர் வரதராஜலு நாயுடு அவர்கள் அதுபோலக் குறுக்குக் கேள்விகள் போட்டு வாதிட்டார்கள். உயர்ந்த சாதி என்பவர்களுக்கு அதுகூடக் கேட்க உரிமையில்லையா? என்ன? ஸ்ரீமான். டாக்டர் அவர்களே அதுபோலக் கேட்பாரானால் அவர் பக்கத்தில் நிற்கும் அவரது வேலைக்காரன் இன்னும் எந்த அளவில் மிகைப்படுத்திக் கேட்பான் என்று சமத்துவ நோக்கங் கொண்ட தோழர்களைச் சிறிது சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டுகிறோம். மு. ராஜமாணிக்கம்.

இந்தி எதிர்ப்பு மறியல்.

38-ம் நாள் போர்.

சென்னை நவ 23.

இன்றும் 9-30 முதல் 10-30 வரை ஒரு மணிநேரம் அறப்போர் வீரர்களின் அன்புப்போர் அமைதியான முறையில் நடைபெற்றது.

★

நடக்கவிருப்பவை

பொதுக்கூட்டம்.

6—12—48ம் நாள் மாலையில் பஞ்சமாதேவிமாரியம்மன்கோவில் மைதானத்தில் கரூர் தோழியர் கெ. பி. பழனியம்மாள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்களான வேலூர் சித்ரா ஈரோடு பாலகுரு, அப்பாவு, கரூர் என். ரத்தினம், வி. இராமசாமி, கே. பாலையா, கே. இராமசாமி புலியூர் மயில்வாகனன், முருகேசன் முதலியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

ரோஜா முத்தையா

குடி அரசு

27—11—48 சனிக்கிழமை.

பித்தம் தெளியும் மருந்து !

———o———

"பணமூட்டைகளின் பக்க பலமோ, பதவி வேட்டைக்காரர்களின் பசப்புரையோ கொண்டில்லாத திராவிடக்கழகம், இன்று நாளுக்கு நாள் மக்களிடையே பெருஞ்செல்வாக்குப் பெற்று வருகிறது. காரணம், மக்களுக்கு உடனடித்தேவை — நிரந்தரத்தேவை என்ற இருவகையிலும் திட்டங்களைக் கொண்டு பணியாற்றும் அரசியல் கட்சி, திராவிடர் கழகத்தைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதை மக்கள் உணர்ந்துகொள்ளத் தலைப்பட்டு விட்டனர். கழகத்தின் தலைவர்களும் தன்னலமின்றி, நெஞ்சிற்பட்டதை நேர்மைத் திறனோடு மக்களுக்கு எடுத்துக்கூறி, மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து வருகின்றனர். "சுயமரியாதைக்காரர்கள்" "நாஸ்திகர்கள்" "பதவி வேட்டைக்காரர்கள்" என்றசொல்லம்புகள் எல்லாம் இன்று கூர் மழுங்கி விட்டன. சுயமரியாதைக்காரர்கள் சொல்வதிலே சூது ஒன்றும் இல்லையே என்று மக்கள் கேட்கின்றனர். நாஸ்திகர்களின் கூட்டம் என்றால் மக்கள் நாலா திசைகளிலிருந்தும் புற்றீசல்கள் போல் கட்டுச்சாதம் கட்டிக் கொண்டு வருகின்றனர். இந்தப் போக்கு இப்படியே வளர்ந்து கொண்டு வருமானால் திராவிடக் கழகம் என்கிற பூதம் இந்நாட்டு மக்கள் எல்லோரையும் விழுங்கி விடும் என்பது உறுதி, உறுதி, முக்காலும் உறுதி."

இது நம் கழகத்தைக் குறித்து நாம் கூறிக்கொள்ளும் தற்பெருமையல்ல. எதிரிகள் என்று தங்களை எண்ணிக் கொண்டிருக்கும் எதிர்முகாம்களில் பேசப்படுகின்ற பேச்சு இது. இதற்கு எடுத்துக் காட்டாக, வீரசவர்க்காரின் இணையடி பேத்தும் வீர புருஷராம் டாக்டர் வரதராஜுலு அவர்கள் நான்கு நாளைக்குமுன், அனைந்திந்தியக் காங்கரஸ் தலைவர் தோழர் பட்டாபி அவர்களுக்குக் கொடுத்திருக்கும் தந்தியைக் குறிப்பிடலாம்.

தந்திச் செய்தியைத் தினப்பத்திரிகைகளில் படித்த தோழர்கள், நாம் மேலே காட்டியிருப்பது போல் அச்செய்தி இல்லையே என்று நினைக்கலாம். டாக்டர் அவர்கள் அனுப்பி இருப்பது "தந்தி" என்பதையும், வேற்றுப் பாசறையிலிருந்து பலரும் அறியும் வண்ணம் விடுவிக்கப்பட்ட செய்தி என்பதையும் சேர்த்து நினைப்பார்களானால், நாம் காட்டியிருக்கும் விளக்கத்தைக்காட்டிலும், பலப்பல சங்கதிகளை அதுகொண்டதாய் இருக்கிறது என்பதான முடிவுக்கே வந்தாக வேண்டும்.

ஆனால் டாக்டர் அவர்களுக்குக் கழகத்தின் பெருமையைக் கூற வேண்டும் என்பது கருத்தல்ல என்பதையும், இம்மாதிரியான ஒரு தந்தியால் ஏதேனும் பேரம் பேசுவதற்கான சந்தர்ப்பத்தைக்கொடுக்கப்பட்டிருக்கிறதல்லவா என்பதையும் நாம் மறுக்கவில்லை. அவர் எந்த நோக்கத்தோடு அந்தத் தந்தியைக்கொடுத்திருந்தாலும்,

"சமீபத்தில் ஈரோட்டில் நடைபெற்ற திராவிடக் கழக மாநாட்டில் சுயநிர்ணய சுதந்தரத் திராவிட அரசு வேண்டுமென்ற கோரிக்கை வலியுறுத்தப்பட்டது. அம்மாநாட்டில் **50000** மக்கள் கலந்து கொண்டனர். இது கவனிக்கப்படவேண்டிய முக்கிய விஷயம்"

போதுவாகக் காங்கரஸ் கமிட்டிகள் அதிலும் குறிப்பாகத் தென் இந்தியாவில் மக்கள் மதிக்கத்தக்க வகையில் திருத்தியமைக்கப்பட வேண்டும்" என்று கண்டிருக்கும் பகுதிகள் எவற்றை விளக்குகின்றன? என்று கேட்கிறோம்.

நாட்டை ஆளும் மெஜாரிட்டிக் கட்சி என்று சொல்லிக்கொள்ளப் படும் காங்கரஸ் கட்சியிலே மக்கள் மதிக்கத் தகுந்த வகையில் திட்டமில்லை என்று திட்டவட்டமாகக் கூறுவதிலிருந்து, இந்த நாட்டுக் காங்கரசின் உண்மையான யோக்கியதையை டாக்டர் அவர்கள் புரிந்து கொண்டிருக்கிறார் என்றே நினைக்கிறோம். இவ்வளவு தெளிவாக உணர்ந்த பின்பும்கூட, இதற்குப் பரிகாரம் "திருத்தியமைக்கப்படவேண்டும்" என்பதாக விண்ணப்பித்துக் கொள்கிறாரே, விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் என உண்மையாக நம்புகிறாரா? அவ்வாறு திருத்தினாலும் கூட அது கழுதைக்குச் சிங்க முகத்தை ஒட்டி அழகுபார்க்கும் சிறுபிள்ளைத் தனம் ஆகும் என்பதை ஏன் இவர் உணரவில்லை?

"பிரிவினை மனப்பான்மை, வகுப்புணர்ச்சிகள் ஆகியவைகள் தமிழ் நாட்டில் அமோகமாக வளர்ச்சி பெற்று வருகிறது" என்று கூறும் டாக்டர் அவர்கள் இந்நாட்டு மக்களின் நலத்தில், முன்னேற்றத்தில் அக்கரையுடையவர் என்றால், இதைப்பிரதிபலிக்க வேண்டியது அல்லவா நாணயமும் புத்திசாலித்தனமும் முறையுமாகும்? அப்படியில்லாமல் இதைக் களைந்தெறிவதற்குக் காங்கரஸ் பெருந்தலைகள் முன்வர வேண்டுமென வேண்டுகோள் செய்வது, நாட்டு மக்களின் கருத்தாகுமா? நாட்டு மக்களைக் காட்டிக் கொடுக்கும்........கருத்தாகுமா? என்றும் அவரைப் பணிவோடு கேட்கிறோம.

அரசியலில் ஆங்கிலேயனிடமிருந்து நாம் விடுதலை பெற்று விட்டோம். ஆனால் பொருளாதாரத் துறையில் நாம் இன்னும் விடுதலை பெறவில்லை என்பது நினைவிருக்கவேண்டும். ஆதலால் நாம் இப்போது பெற்றிருக்கும் விடுதலை முழு விடுதலை அல்ல என்று பிரதம மந்திரியாரிலிருந்து பேசுகின்ற காங்கரஸ்காரர் ஒவ்வொருவரும் சோஷியலிஸ்டுகளும், கம்யூனிஸ்ட்களும் கூறி வருகின்றனர்.

அரசியலில் விடுதலை என்பது அபத்தமான பேச்சு! தவிட்டு நிறத்திலிருந்து மஞ்சள் நிறமாயிருக்கிறதுதான் வித்தியாசமே தவிர அதாவது 200 வருடங்களுக்கு முன்னால் வந்த ஆரியரிடமிருந்து 2000 வருடங்களுக்கு முன்னால் வந்த நாடோடிக் கும்பலிடம் அரசியல் கை மாற்றப்பட்டிருக்கிறதே தவிர அரசியலில் விடுதலை என்பது சிறிதும் அர்த்தமில்லை! பொருளாதாரத் துறையிலோ நம்முடைய நிலைமை மிக மிக மோசம்! வடநாட்டு வணிக முதலைகள் மேல் நாட்டு வணிக வேந்தர்களுக்கு கங்காணிகளாகித் தென்

னாட்டு மக்களைச் சுரண்டுவதற்கே திட்டமிட்டு வேலை செய்யப்பட்டு இதற்குத் தேசிய முலாம்பூசப்படுகிறது. இந்த நிலைமை நீடிக்க, நீடிக்கத் திராவிடன் ஒவ்வொரு அடியாகக் கீழே தள்ளி அழுத்தப்படுகிறான். இந்த இரண்டு துறைகளில் மட்டுமல்லாமல், இந்த இரண்டிற்கும் நிலைக்களமாயிருக்கும் சமுதாயத் துறையிலோ திராவிடன் மீளா முடியாத வகையில் படு பாதாளத்தில் அழுத்தப்பட்டிருக்கிறான். ஆகவே மக்கள் கவனமெல்லாம் முதலில் இந்தச் சமுதாயத் துறையிலேயே செலுத்தப்பட வேண்டும் என்று கூறி வருகிறது திராவிடக் கழகம். அதற்கான பிரசாரம் எல்லாம் முடிந்துவிட்டதே, எப்பொழுது திட்டத்தைத் தருவீர்கள் என்று கேட்கிறார்கள் கழகத் தோழர்கள் தலைவர்களை நோக்கி.

இவ்விரு நிலையையும் உணர்ந்த டாக்டர் அவர்கள், "மக்கள் மதிப்பைப் பெறும் வகையில் பொதுவாகக் காங்கரஸ் இல்லை" எனக் கூறுவதிலிருந்து எஃதை உணர்த்தவேண்டுமென்று ஆசைப்படுகின்றார்? காங்கரசின் இப்போதைய நடைமுறைத் திட்டங்கள் எதுவுமே கவைக்குதவாது என்கிற கருத்தோடு கூறுகிறாரா? பணக்காரர்களுக்குப் பக்கபலமாகக் காங்கரஸ் இருக்கிறதேதவிர பாட்டாளி மக்களுக்குத் தோழனாக இல்லை என்பதை உணர்த்துகிறாரா? அழிந்துவரும் வருணாச்சிரமத்திற்குக் காங்கரஸ் அணைபோட்டுத் தடுத்து நிறுத்தப்பார்க்கிறதேதவிர, ஒரே சமுதாயம் என்னும் உருவான திட்டத்தைக் கொள்ளவில்லை என்கிறாரா? ஒரே நாடு என்கிற உதவாக்கரைப் போக்கினால், மாகாணங்களின் சுயவுரிமையும், சுயமரியாதையும் சூறையாடப்பட்டு, மத்தியத்தின் ஏக ஆதிபத்தியமாகவும், ஏக ஆணவ முறையாகவும் நடந்துவரும் போக்கினைக் கண்டிக்கிறாரா?......

மறைமுகமாக, மக்கள் மதிப்பைப் பெற்றுவருகிறது திராவிடக் கழகம் என்று கூறாமல் கூறும் தோழர் டாக்டரவர்கள், பிரிவினை மனப்பான்மை பெரும் அளவில் வளர்ந்து வருகிறதே என்று வெளிப்படையாகக் கூறுவதிலிருந்து எதையுணர்த்தவேண்டுமென்று ஆசைப்படுகிறார்? கழகத்தின் எந்தெந்தத் திட்டங்களைக் காங்கரஸ் மேற்கொண்டால், அது மக்கள் மதிக்கத்தகுந்த வகையில் மாறும் என நம்புகிறார்? பிரசாரம் செய்து, செய்து மக்களின் சுயசிந்தனையைத் தூண்டி, தூண்டிப் பேராதரவைப் பெற்று நிற்கிறது கழகம், இனியும் பெரும் ஆதரவைப் பெற்றுத் தீரும் என்கிற முடிவைக் கூறுகின்ற டாக்டரவர்கள், கழகத்தைப்போலக் காங்கரசும் மக்கள் மதிப்பைப்பெறும் வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்றால் இதற்கு என்ன அர்த்தம்?

அரசியல் துறையில் அதாவது பிரிவினைப் பிரச்னை ஒன்றில்தான் காங்கரசுக்கும் கழகத்துக்கும் வித்தியாசமிருக்கிறதுஎன்றெண்ணுகிற மட்டரகம் என்று நாம் டாக்டரை மதிக்கவில்லை. காங்கரஸ்காரர்கள் என்று சொல்லிக்கொண்டே கழகத்தின் சமுதாயத் திட்டங்களில் எங்களுக்கு வெறுப்பில்லை, எல்லாம் உடன்பாடே என்று கூவும் ஒன்றுமறியா இளைஞர்களின் வரிசையிலும் நாம் டாக்டர் அவர்களைச் சேர்க்கவில்லை. இன்று, "மக்களின் மதிப்பைக் கவர்ந்தவை" என்று டாக்டரால் கூறப்படும் நிலையில் கழகத்திற்கு அமைந்த பொருளாதாரத் திட்டங்களும் சமுதாய முன்னேற்றத் திட்டங்களும் இன்று புதிதாக சிருஷ்டிக்கப்பட்டவை அல்ல! அன்றே காங்கரசுக்கு ஆச்சாரியார் வழியாக பெரியாரவர்களால் கொடுக்கப்பட்ட திட்டங்கள் தான்! இதை ஜீரணிக்கும் திறமை எனக்கோ, காங்கரசுக்கோ இல்லை! உட்கொண்டால் உயிருக்கே ஆபத்து! என்று கூறப்பட்டு, மறைந்த பெரியார் காந்தியாரால் மறுத்து அனுப்பப்பட்ட திட்டங்கள்தான்! இதை நன்றாக உணர்ந்திருக்கவேண்டும் டாக்டர் வரதராஜலு அவர்கள். அப்படியிருந்தும், கழகத்தைப்போல மக்கள் மதிக்கத் தகுந்த வகையில் காங்கரஸ் மாற்றியமைக்கப்படவேண்டும் என்று கூறுகின்றார் என்றால், பாழான வருணாச்சிரமக்காங்கரஸ் பட்டொழியவேண்டும் என்று உண்மையாய் விரும்புகிறாரா? அல்லது மக்கள் மதிப்பைப்பெறவேண்டும் என்பதற்காகப் பயனற்ற போலித்திட்டங்களைப் பெருக்கவேண்டுமென்று விரும்புகிறாரா?

டாக்டர் அவர்களின் வருணாச்சிரம வெறி—ஜாதிவெறி எந்த அளவில் இருக்கிறது என்பதை நாம் மற்றொருபுறத்தில் டாக்டரின் ஜாதிப்பித்தம் என்கிற தலைப்பில் வெளியிட்டிருக்கிறோம். அதைப் பார்க்கின்ற எவரும் தன் பித்தத்துக்கே மருந்து காணாத இந்த டாக்டர், காங்கரஸ் உயிர் வாழ்வதற்கு மருந்து தருகின்றாரா என்று எள்ளி நகையாடுவர் என்பது ஒரு புறமிருக்கட்டும். தென்னாட்டு அரசியல் வானில் பெரும் சுடரொளிகள் என்று புகழ்ப் பெற்ற மூன்று தலைவர்களில் டாக்டர் அவர்களின் நிலைமை, இவ்வளவு கீழ்த்தரமாக, நாட்டுமக்களின் கருத்துக்கு மாறுபாடாக அன்னியருக்கு விண்ணப்பம் செய்து, அவர்களுடைய தயவில் வாழவேண்டுமென்பதாக வந்திருக்கிறதே என்பதை எண்ணியே நாம் மிகவும் அனுதாபப் படுகிறோம். மூவரில் மற்றொருவரான தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள், இன்னும் பத்தே ஆண்டுகளில் இன்பத் திராவிடம் கண்டு விடுவோம் என எக்காளமிட்டதைக் கேட்டுவிட்ட பிறகும்கூட, அன்னியரைத் தாங்கித் தாங்கியே அரசியல் உலகில் வாழவேண்டும் என்கிற டாக்டர் அவர்களின் பழைய வாசனை இன்னும் மாறவில்லையே என்பதை எண்ணித்தான் நாம் மிகவும் வருந்துகிறோம்.

இன்றைய இந்தி நுழைவைமட்டும் சென்னை அரசாங்கம் நுழைக்காதிருந்திருக்குமானால், அப்படி நுழைத்துக் கழகத்தை வலுச்சண்டைக்கு அழைக்காதிருந்திருக்குமானால், கழகம் பயனுள்ள பல காரியங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது என்பதையும், அப்படி அக்காரியங்களைச் செய்ய அது முனைந்து விடுமானால், உணர்ச்சியும் அறிவுமுள்ள ஒவ்வொரு மனிதனும் அவற்றைப் பின்பற்றி ஆதரித்துப் போற்றியே ஆகவேண்டும் என்பதையும் டாக்டர் அவர்கள் உணர்ந்திருப்பதாகக் காட்டிக் கொண்டிருக்கிறார். இதைத்தான் நாம் மற்ற காங்கரஸ் திராவிடத் தோழர்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

அதாவது சமுதாய இழிவைத் துடைக்கும் வகையில், "ஜாதியில் நான் உயர்ந்தவன், நீ எனக்குக் குற்றேவல் செய்யவேண்டியவன்! உங்களுடைய முன்னோர்கள் எங்களுடைய முன்னோர்களுக்கு வைப்பாட்டி பிள்ளைகள்! உன்னுடைய வீட்டில் நடக்கும் ஒவ்வொரு நல்ல செயலுக்கும், கெட்ட செயலுக்கும் என்னை

நீ அழைத்தே யாகவேண்டும்! அதற்குப் பரம்பரையாகக் கட்டிவரும் மாமூல் வரியை நீ கொடுத்தேயாக வேண்டும்!'' என்று சாஸ்திரத்தைத் துணைகழைத்து, மோட்சம் நரகம் என்று பேசும் முடிச்சுமாறிகளின் மோசச் செயலுக்கு, ஆதரவாக நிற்கும் ஒவ்வொரு முனையும் கழகத்தின் அன்புப் போருக்குக் களமாகவே விளங்கும்! கலியாணப் புரோகிதன், கருமாதிப் புரோகிதன், கடவுள் புரோகிதன் எங்கெங்கு அழைக்கப்படுகின்றானோ-நுழைகின்றானோ அங்கெல்லாம் அவனுக்கு முன்னால கழகத் தொண்டர்கள் அணிவகுத்து நிற்பர்! இக் கருத்துக்களை யூட்டும் நாடகங்கள், சினிமாக்கள், நடனசாலைகள் யாவுமே அறப்போர்க்களங்களாக விளங்கும்! நச்சுக் கருத்துக்களைப் புகுத்தி, நாசப்பாதையில் இழுத்துச் செல்லும் ஏடுகள், எந்தப் போர்வையிலிருந்தாலும், அவைகள் எல்லாம் இந்நாட்டு மக்களின் இன இழிவுப் போருக்குரியதாய் கொளுத்திச் சாம்பலாக்கப்பட வேண்டிய நிலையையே யுண்டு பண்ணும்!......

இவ்வாறாக, சமுதாய இழிவைத் துடைக்கும் பணியில் கழகம் இறங்கிவிடுமானால், காங்கரசில் உள்ள திராவிடத் தோழனுக்கோ, அல்லது வேறு கட்சியிலுள்ள திராவிடத் தோழனுக்கோ அங்கெல்லாம் வேறு என்ன வேலை இருந்துவிட முடியும்? ஓட்டோட்டமாய் முன்னணியைத் தேடி அல்லாவா விரைந்து வருவார்கள்? அப்போது இந்த நாட்டின் நிலை என்ன? இக்கேள்விகளை டாக்டர் கேட்கவில்லை. ஆனால் "நாட்டில் வகுப்புணர்ச்சி அமோகமாக வளர்ச்சி பெற்று வருகிறது'' என்று அலறுவதிலிருந்து சநாதனத்தின் வீழ்ச்சியை எப்படிப்படம்பிடித்திருக்கிறார் என்பதை நன்கு அறிந்துகொள்ளலாம்.

இவ்வளவு தெளிவாக நிலைமைகளைப் புரிந்துகொண்ட பிறகும் கூட, அனுபவ முதிர்ந்த அறிஞரான டாக்டரவர்களுக்குப் பித்தம் தெளியும் மருந்து இது என்று நாம் எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை! ஆனால் அவருடைய கடைசிப் பருவமாவது இந்நாட்டு மக்களுக்கு இதத்தைத் தரும் வகையில் ஏன் இருக்கக் கூடாது என்றே நாம் ஆசைப்படுகிறோம்.

அய்ந்து லட்ச ரூபாய் அரோகரா!

கதர்த் திட்டம் கை நட்டமே!

★

கவைக்குதவாத கதர் வளர்ச்சித் திட்டத்தைச் சென்னை மந்திரி சபை சீக்கிரமாகவே கைவிட்டு விடவேண்டும். ஏன்? பொது மக்கள் அதைப் போற்றவில்லை, பொருளாதாரத்திலும் பயன்தரவில்லை என்று திட்டவட்டமாகத் தெளிவாகி விட்டது.

பிர்க்கா அபிவிருத்தித் திட்டத்தின் ஒரு பகுதியான இந்தக் கதர்த் திட்டம், 1946-ம் ஆண்டில் அப்போது பிரதமராயிருந்த தோழர் பிரகாசம் அவர்களால் கொண்டுவரப்பட்டதாகும். "தேர்ந்தெடுக்கப்படும் சில பகுதிகளில் அங்கு வாழ்ந்து வரும் மக்களைக் கதர் உற்பத்தி செய்யச் செய்து, அவர்கள் கதரையே அணிந்து வரவேண்டுமென வலுவந்தப்படுத்துவதின் வழியாக'' அதனை அமுல்படுத்த வேண்டுமென்று அப்போது தீர்மானிக்கப் பட்டது.

இத் திட்டத்தை விளக்கி அப்போதே மாகாண ஜவுளிக் கமிஷனர் வெளியிட்ட அறிக்கை ஒன்றில், "ஒவ்வொரு குடும்பமும் நூல் நூற்பதற்கென்று தத்தம் குடும்பத்தினரில் ஒருவரையோ, அல்லது அதற்குப் பதிலாக வேறொரு நபரையோ தந்துதவக் கடமைப்பட்டுள்ளது'' என்பதாகக் காணப்படுகிறது.

அபிவிருத்தித் திட்டம் அமுலாக்கப்படும் பிர்க்காவாசிகள் அனைவரும், கதர் ஒன்றையே தான் அணிந்து வரவேண்டும், ஏனைய துணிகளை ஏறெடுத்தும் பார்க்கலாகாது என்று திட்டமாகக் குறிப்பிடப்படவில்லை என்றாலும், கதர் தவிர்த்த ஏனைய துணிகளை அவர்கள் அடைய முடியாதபடி செய்வதற்கான அமைப்பு அத்திட்டத்தில் இருந்தது. "இத்திட்டம் ஒவ்வொரு பகுதியிலும் முன்னேற்றமடைந்து கொண்டு வர வர, மேற்படி பகுதியிலுள்ள நெசவாளிகளுக்குக் கொடுக்கப்பட்டு வரும், ஆலை நூல் மூலம் நெய்யப்பட்ட கைத்தறித் துணியின் அளவும், மேற்படி பகுதியினருக்கு ஒதுக்கப்பட்டு வரும் மில் துணியின் அளவும், அந்தந்தப் பகுதியில் உற்பத்தியாகும் கதர் துணியின் அளவுக்கு ஏற்ப, மாகாணக் கமிஷனரால் கட்டுப் படுத்தப்பட்டு வரும்'' என்று அந்த அறிக்கையிலேயே குறிக்கப் பட்டிருக்கிறது.

இந்தத் திட்டத்தில், 1947-ஜனவரியில் சிறு மாற்றம் செய்யப்பட்டது. அம்மாற்றத்தின் மூலம் கதர்த் திட்டம், "தீவிரத் திட்டமெனவும், மிதவாதத் திட்டமெனவும் இருவகையாகப் பிரிக்கப்பட்டது. குறிப்பிட்ட ஏழு இடங்களில், அந்தந்த இடத்து மக்களுக்கு தேவையான அளவு கதரை உற்பத்தி செய்வதில் கவனம் செலுத்தவேண்டும் என்பது முதலாவதான தீவிரத்திட்டமாகும். மற்றும் 27 பகுதிகளில், அதுபோலவே கதர் வளர்ச்சி செய்யப்படுவதற்கான சூழ்நிலையை உண்டாக்குவதில் கவனம் செலுத்தவேண்டும் என்பது இரண்டாவது மிதவாதத் திட்டமாகும்.

இம் மாறுதல் திட்டத்தில் கட்டாய நிலை ஒன்றும் இல்லை. ஆனாலும் "ஒவ்வொரு குடும்பத்தினரும் தத்தம் குடும்பத்தினரால் நூற்கப்பட்ட நூலை, தத்தம் குடும்பத்தினருக்கு வேண்டிய ஆடைகளை உற்பத்திசெய்ய உபயோகப் படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள். அதை அரசாங்கம் பெரிதும் ஆதரிக்கும்'' என்று 1947 ஜனவரியில் சட்ட சபையில் சமர்ப்பிக்கப்பட்ட சர்க்கார் குறிப்பில் காணப்படுகிறது.

குறைந்த அளவான அத்தீவிரத் திட்டத்தினாலும்கூட நஷ்டம் தான் ஏற்படுமென்று அப்போதே எதிர்பார்க்கப்பட்டது.

"சர்க்கார் கருதுகிறபடி இந்தத் திட்டம் வெற்றி பெறுமானால் மொத்த நஷ்டம் $5\frac{1}{2}$ லட்சத்திற்கு மேல் போய்விடாது. அந்த $5\frac{1}{2}$ லட்சத்தில் 3 லட்சம் பயிற்சிக்காகவும், $2\frac{1}{2}$ லட்சம் மேற்படி திட்டத்தின்படி நூற்பவர், நெய்பவர் ஆகிய இரண்டு வகையினருக்கும்

உதவிசெய்வதற்காகவும், உபயோகிக்கப்படும் என்று அந்த அறிக்கையிலேயே காணப்படுகிறது.

"திட்டம் வெற்றி பெறுமானால்" என்ற சொற்கள் திட்டத்தின் முடிவை செவ்வனே விளக்குகின்றன! எதிர்பார்த்தபடி திட்டம் வெற்றிபெறவில்லை!

முன்குறிப்பிட்ட, தெரிந்தெடுத்த ஏழு இடங்களில் உற்பத்தி செய்யப்பட்ட 6,40,149 கெஜம் கதரில் பாதிக்கு மேற்பட்டு அதாவது 3,35,000 கெஜம் கதர் (சுமார் ரூபாய் 5,03,000 பெறுமான கதர்) விற்கப்படாமல் ஆண்டிணிறுதியில் கையிருப்பில் இருந்ததாக, 1948 மார்ச்சுமாதம் 31ந் தேதி முடிய சமர்ப்பிக்கப்பட்ட ஜவுளி கட்டுப்பாட்டு இலாக்கா அறிக்கையில் காணப்படுகிறது.

விலை உயர்ந்ததும், அருவெறுப்பானதும், திடமில்லாததும், நீண்ட நாள் உபயோகத்திற்கு லாயக்கற்றதுமான கதரை யாரும் விரும்பவில்லை. 1948 மார்ச்சிலேயே "யூனிபாரம்" அணிய வேண்டிய சர்க்கார் சிப்பந்திகள் அனைவரும், கதர் யூனிபாரங்களையே அணிய வேண்டுமென்று சர்க்காரால் உத்தரவிடப்பட்டது என்றாலும், அவ்வுத்தரவிற்குக் கட்டுப்படவேண்டிய எல்லா இலாக்காக்களும் அவ்வாறு நடக்கவில்லை. பொருளாதாரம் பற்றிச் சிறிதும் கவலையே இல்லாமல் நடந்துவரும் சர்க்காரின் பஸ் போக்கு வரத்து ஸ்தாபனம்கூட, தன்னுடைய சிப்பந்திகளுக்குக் கதர் உடையைத்தர விருப்பமின்றி, நீண்டநாள் உழைக்கக்கூடிய வேறு துணிகளையேகொடுத்துவருகிறது.

தெரிந்தெடுக்கப்பட்ட ஏழு இடங்களில் ஒன்று சேலம் ஜில்லாவைச் சேர்ந்த புளியாங்குறிச்சி பிர்க்கா. அந்தப் பிர்க்காவின் அபிவிருத்தி அதிகாரிகூட தம்முடைய அறிக்கையில், "ஆலை நூலையும் ஆலைத் துணியையும் விற்பனை செய்யப்பட்டு வருவதை இப்பகுதியில் தடைப்படுத்தப்பட வேண்டும்" என்று கூறியிருக்கிறார். மற்ற துணிகளை வாங்க முடியாதவாறு செய்தாலொழிய, அப்பகுதியினர் கதரை வாங்கமாட்டார்கள் என்பதைத்தான் அவ்வதிகாரியின் அறிக்கை தெளிவாக்குகிறது. ஆனால், தம்முடைய குறைந்த வருமானத்தைக்கொண்டு, அணிவதற்குத் தகுதியற்ற அக்கதர் துணியை வாங்கிக்கொள்ளப் பொதுமக்களை ஏன் கட்டாயப்படுத்தவேண்டும்? என்பதற்கு அவர் காரணம் எதுவும் காட்டவில்லை. ஏழை மக்களுக்குக் கிடைக்கக்கூடிய ஒவ்வொரு காசும், அவர்தம் உணவுக்குத் தேவையாயிருக்கும் இக்காலத்தில், நீண்ட காலம் உழைக்கக் கூடிய மில் துணியைக் குறைந்த பணம் கொடுத்து வாங்குவதைத் தடுத்து, நீண்டகாலம் உழைக்காத கதர்த் துணியை இரட்டிப்பு விலை கொடுத்து வாங்குமாறு கட்டாயப் படுத்துவது, அவர்களைப் பட்டினி போட்டுச் சித்திரவதை செய்வதற்கே ஒப்பாகும்.

அரசாங்கத்தினருக்குரியசெல்வ வசதி முழுவதையும் அவசரமான, இதர உபயோககரமான திட்டங்களுக்குத் தேவையாயிருப்பதால், முட்டாள்தனமானதும் காரணம் எதுவும் இல்லாததுமான இந்தக் கதர் வளர்ச்சித் திட்டத்திற்கு மேலும் மேலும் பணத்தை விரயமாக்கிக்கொண்டிருப்பதுகூடாது. விற்காத கதரில்முடங்கிக்கிடக்கும் சர்க்கார் பணமான 5 லட்ச ரூபாயைக் கொண்டு, சென்னைப் பள்ளிகளிலுள்ள சிறுவர்களுக்கு 2 ஆண்டுகள் வரை இலவசமாகப் பால் கொடுத்திருக்கலாம்! 60 கிராமங்களுக்குக் குடி நீர் வசதி செய்து கொடுத்திருக்கலாம்! ஏன்? ஒரு ஜில்லாத் தலைமை ஆஸ்பத்திரியைக்கூட ஏற்படுத்தி இருக்கலாமே! ஆனால் ஊதாரிப்போக்கை இவ்வளவு சுலபத்திலா விட்டு விடுவார்கள்?

தோழர் கருணானந்தத்திற்கு பிரிவுபசாரம்.

ஈரோடு நவ 23.

இந்நகர் ஆர். எம். எஸ். ஆபீஸில் சார்ட்டராக வேலை பார்த்து வந்த தோழர் எஸ். கருணானந்தம் அவர்கள் மாயவரத்திற்கு மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு, திராவிடர் நடிகர் கழகத்தின் சார்பில் இன்று இரவு 8-மணிக்கு கழகக் கட்டிடத்தில் தோழர் நா. மு. மாணிக்கம் அவர்கள் தலைமையில் ஒரு பிரிவுபசாரக் கூட்டம் நடைபெற்றது. தோழர்களான பி. ஷண்முக வேலாயுதன் அவர்களும், என். இ. பாலகுரு அவர்களும் பிரிந்து செல்லும் தோழரைப் பாராட்டிப் பேசிய பின் தோழர் கருணானந்தம் அவர்கள் சிறிது நேரம் பேசி விடைபெற்றுக் கொண்டார். தோழர் சுப்பய்யன் அவர்களால் நன்றி கூறப்பட்டு இரவு 9-மணிக்கு முடிந்தது.

பெரியாரின் பெருஞ்சக்தி.

உலகில் தோன்றியுள்ள அனைத்தும் வளர்ந்து கொண்டுதான் இருக்கும். சமுதாயம் வளரும். சூரியன் வளர்கிறது. மலைகளும் வளர்கின்றன. மனிதனும் வளரத்தான் செய்கிறான். புழுக்கூட வளர்ச்சியடைந்துகொண்டுதான் இருக்கும். வளர்ச்சி ஒரு அளவுக்கு முற்றுப் பெற்றதும் அவ்வளர்ச்சியை வேறு வழியில் திருப்ப இயற்கையாகவே ஏதாகிலும் மாறுதல் ஏற்படும். அம்மாறுதலின்போது கிடைக்கும் புது சக்தியைக் கொண்டுதான் பழமையும் மாறுதல் பெற்று வளரத் தொடங்கும். மனிதனும் இப்படி வளரக் கடமைப்பட்டவன்தான். ஒவ்வொருத்தரும் சத்தமக்குத் தோன்றியபடி உலக முன்னேற்றத்தையே, சமூக முன்னேற்றத்தையே குறிக்கோளாகக்கொண்டு தம் கடமையைச் செய்து வருவார்களானால் இயற்கை வளர்ச்சியும் அவர்களுக்குத் துணை செய்யும். மக்களுக்கு அவரவர்களுடைய கடமையை உணர்த்த மாறுதலைக் காட்டி அவர் தம் முயற்சியை வேறு பக்கம் திருப்பிச் சமுதாய முன்னேற்றத்திற்கு வழியமைத்துக் கொடுக்க அவ்வப்போது பெரியார்கள் இயற்கையாகவே தோன்றிக்கொண்டிருப்பார்கள்.

கண் மூடிப்பழக்க மெல்லாம் மண்மூடிப்போக என்று கூறி ஒரு ராமலிங்கனார் தோன்றியது, மாறுதலைக்காட்டி மக்கள் முயற்சியை வேறு பக்கம் திருப்பத்தான்.

திராவிட மக்களுக்கு நல்வழி காட்ட, அவர்கள் தம் அடிமை வாழ்க்கையை மாற்றி இன்ப வாழ்வு அமைத்துக் கொடுக்க இயற்கை தோற்றுவித்த பெரியார் தான் நமது ஈரோட்டுப் பெரியார் ஆவார்.

இயற்கையின் அருமைப் புதல்வர் இவர். ஆதலால்தான் காந்தியையும் மிஞ்சிய அளவுக்கு அகிம்சாவாதியாகவும், சாக்ரடீசையும் மிஞ்சிய அளவுக்கு சமுதாயச் சீர்திருத்தக்காரராகவும் பெரியார் விளங்குகிறார்.

—திரு. வி. க.

[6ம் பக்கத் தொடர்ச்சி]

தங்களை எண்ணித் தமிழர்களைப் புறக்கணித்து வரலாயினர். இக்குறைபாடுகளையெல்லாம் போக்கி, முன்போலத் தனித்தமிழாக்கங்காணவும், தமிழர்க்குத் தமிழ்ப்பற்றையுண்டாக்கவும், திராவிடத் தமிழ் நாடு காணவும், தமிழர் ஆரியச்சார்பற்று வாழவுமே இராவணகாவியம் செய்யப்பட்டது.

அண்டிப் பிழைக்க வந்த ஆரியப் பார்ப்பனர்கள், தமிழ் நாட்டில், தமிழர்களுக்கு—கோயில் குருக்கள், குல குருக்கள், உலககுருக்கள், புரோகிதர், பஞ்சாங்கிகளாகவும் இருந்து, பிறப்பு, இறப்பு, திதி, திவசம், அர்ச்சனை, ஆராதனை எனப் பலவழியிலும் தமிழ் மக்களின் உழைப்பின் பயனை உறிஞ்சி வாழும் நயவஞ்சகச் செயலை ஒழிக்கவே இராவணகாவியம் செய்யப்பட்டது. வண்டமிழ் மக்களே! இவ்வளவு காலமாய், அவ்வஞ்சகர்களுக்கு வாய்க்கரிசி போட்டது போதும், அவையனைத்தும் தமிழ் மரபுக்குப் புறம்பானவை; தமிழர் உழைப்பை உறிஞ்சுபவை; தமிழர் தன்மானத்தைப் போக்கித் தமிழரை மூடநம்பிக்கையில் மூழ்கடிப்பவை; ஆரியர் வாழ்வுக்கும், ஆரிய ஆதிக்கத்துக்கும் அடிப்படையாய் இருப்பவை, தமிழர் முன்னேற்றத்திற்குத் தடைகல்லாய் அமைந்தவை என்னும் உண்மையைத் தமிழ் மக்களுக்கு எடுத்துக் காட்டித் தமிழர்களுக்கு இனவுணர்ச்சி யுண்டாக்கவே இராவணகாவியம் செய்யப்பட்டது.

உலக முதன் மொழியாகிய உயர் தனிச் செந்தமிழிருக்க, தமிழ்ப் பகை மொழியாகிய செத்த வடமொழி, தமிழர்களின் கோயில் குளம், வீடுவாசல், சாவு வாழ்வு முதலிய எல்லாத்துறைகளிலும் ஆதிக்கஞ் செலுத்திவருவதையும், தமிழ்நாட்டிலே பிறந்து, தமிழ் நாட்டிலே வளர்ந்து, தமிழ் நாட்டிலே தமிழரிடையேயிருந்து, தமிழைப் பேசித் தமிழாலே வாழ்ந்து வரும் 'ஸ்ரீ' கூட்டம், ஒரே கட்டுப்பாடாய் தமிழை ஆரியச்சார்பாகவே பேசியும், ஆரியநாடு, ஆரியமொழி, ஆரியா, ஆரியகொள்கை, ஆரியநாகரிகம் முதலியவற்றையே சிறப்பித்துக் கூறியும், தமிழைவிட்டு ஆரியமொழியையே தங்கள் மக்களை கற்கும்படி செய்தும், தமிழ் எழுத்தாளரெனப் பத்திரிகை மூலம், நூல்மூலம், கதை. கட்டுரை, நாடகமூலம் தமிழையும், தமிழ்ப் பண்பாட்டையும் சிதைத்தும், ஆரியத்தைப்புகுத்தியும் வரும் ஆரியச் சூழ்ச்சியைத் தமிழ் மக்கள் அறியும்படி செய்யவே இராவணகாவியம் செய்யப்பட்டது.

தமிழர் பண்பாடு, தமிழர் நாகரிகம், தமிழர் மணமுறை, தமிழர் வாழ்க்கை முறை, தமிழர் ஆட்சிமுறை, தமிழர் போர் முறை, தமிழர் வீரம், கொடை, நடை, மேம்பாடு, தமிழர் ஒருமை வாழ்வு, பழந்தமிழ் நாட்டின் வரலாறு, பழந்தமிழர்வரலாறு, தமிழர் தமிழைப் போற்றி வளர்த்த வரலாறு, தமிழ் வரலாறு, உலகமக்களுக்கே எடுத்துக் காட்டாய்த் தமிழர் வாழ்ந்து வந்த நிலை, ஆரியர் வரவு, ஆரியச்சூழ்ச்சி, இன்னபல பழந்தமிழ் வரலாறுகளை எல்லாம் இன்றையத் தமிழ்மக்கள் அறிந்து, இன்றுள்ள தம் நிலைக்கிரங்கித் தமிழ் இனவுணர்ச்சியுற்று, ஒன்றுபட்டு வீறிட்டெழுந்து ஆரிய வடவாதிக்கத்துக்குச் சாவுமணியடிக்கவே இராவணகாவியம் செய்யப்பட்டது.

கம்பன் கவிநயத்தால், கற்பனைத் திறத்தால், கலைச் சிறப்பால், காவியச் சுவையால் கட்டுண்டு. ஆரியச் சேற்றில் அழுந்திக்கிடக்கும் தமிழ்ரசிகமணிகளைத் தனித்தமிழுலகில் உலவச் செய்து, பழந்தமிழகத்தின் இயற்கை வளத்தை, இன்பவாழ்வை, இயல் நெறி முறையை இனிது கண்டு, களிக்கும்படி செய்யவே இராவணகாவியம் பாடப்பட்டது. ஆரிய வான்மீகியாலும், ஆரிய அடிமையான தமிழ்க்கம்பராலும் வேண்டுமென்றே—சாதாரண ஓர் ஆரிய அரசன் மகனான ராமனைத் தெய்வத்தன்மை பொருந்தியவனென்றும், திருமாலின் திருவிறக்கமென்றும், தமிழர்களாகிய இராவணன் முதலியோர்களை அரக்கர்களென்றும், குரங்குகளென்றும் புளுகி வைத்த பொய்க்கூற்றினை அகற்றவும், இயற்கைக்கு ஒவ்வாப் புனைந்துரைகளைப் போக்கவும், இராமாயணத்தின் உண்மை வரலாற்றைத் தமிழ் மக்கள் உணர்ந்து கொள்ளவுமே இராவண காவியம் செய்யப்பட்டது.

முடிவாகக் கூறவேண்டுமானால், தமிழ் நாட்டிலிருந்து கொண்டு, தமிழைப்பேசி, தமிழால் வாழ்வு நடத்தி, தமிழர் உழைப்பை உறிஞ்சியுண்டு, தாங்களும் தமிழர்களெனக் கூறிக் கொண்டு, தமிழ் நாட்டில் ஆரியத்தைப் பரப்ப-நிலைநாட்ட அரும்பாடு பட்டுவரும் 'ஸ்ரீ' போன்றவரின் கொட்டத்தையடக்கவே இராவண காவியம் செய்யப்பட்டது என்பதை நண்பர் 'ஸ்ரீ' ஆச்சாரியார் அவர்கட்கு அன்புடன் கூறிக்கொள்கின்றோம். இன்னும் எதற்கென்றால் கூறவும் தயாராக இருக்கின்றோம்.

இந்தி எதிர்ப்பு மறியல்.

39-ம் நாள் போர்.

சென்னை நவ 24.

என்றும் போலவே இன்றும் அமைதியான முறையில் ஐந்து தொண்டர்களின் மறியல் நடைபெற்றது.

மறியலை முன்னின்று நடத்தும் தோழர்களையும், மற்றும் இயக்கப்பிரமுகர்களையும் தெருவிலே நிற்கக் கூடாதென்றும், வீட்டு வாயிலுக்குள் இருக்கவேண்டுமென்றும், என்றுமில்லாதவாறு இன்று போலீசார் கெடுபிடி செய்தார்கள் என்றாலும், முன்னின்று நடத்தும் தோழர்கள் அதை ஒப்புக் கொள்ளாமல், "இந்தவீண் தொந்தரவுகளுக்கு நாங்கள் பயந்துவிட முடியாது. வேண்டுமானால் கைது செய்யுங்கள்" எனக் கூறியதும் போலீசார் பேசாது சென்றனர். இதனால் மக்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

பிறப்பு.

ராசிபுரம் தோழர் ஆர். ராசமாணிக்கம் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் கமலத்திற்கு 20-11-48ம் நாள் பிறந்த பெண்குழந்தையின் நினைவாக "குடிஅரசு"க்கு அனுப்பிய நன்கொடை ரூ. 1 ம் கிடைக்கப்பெற்றோம்.

"திராவிடமணி" வெளியீடு 3.

விரைவில் வருகிறது! தேவைக்கு முந்துங்கள்!!

பரிதாபத்திற்குரிய

பஞ்சமர்கள்

(பெரியாரின் அந்நாள் தொண்டர்களில் மிக முக்கியமான சித்தக்காடு K. ராமையா எழுதியது)

48 பக்கங்கள் அழகிய பதிப்பு விலை அணா 6.

விற்பனையாளர்களுக்கு 25% கழிவு உண்டு.

தேவைக்கு பாதி முன்பணத்துடன் எழுதவும்.

பூரா தொகையும் அனுப்புவோருக்கு தபால் செலவு இனாம்.

கைவசம்:— "தில்லையில் பெரியார்" 8 அணா.

"திராவிடஸ்தான்" 8 அணா.

விபரங்கட்கு:—

"திராவிடமணி பதிப்பகம்"

தெப்பக்குளம், திருச்சி.

ரோஜா முத்தையா

களையைக் களைந்திடு!

[*]

என் அருமைத் தேசியத்தமிழா! நீ விவசாய நாட்டிலே பிறந்தாய்! விவசாயநாட்டிலேதான் வாழ்கின்றாய்! களைகளால் பயிர் சிதையுமா? சிதையாதா? நடுநின்று ஆராய்ந்து நீதி வழங்கு!

உன் அறிவுக்கு வேலை கொடுத்துச் சிந்தித்துப்பார்! சிந்திக்க அவகாசமில்லையானால், தன்மானத் தமிழன் சொல்வதையாவது கேள்!

இது விவசாயிகள் நிறைந்தநாடு. களைகளால் வரும் இன்னல்களை உணராத தமிழ் மக்களிருப்பதரிது. நெற்கழனியில் கோரை, காளான், நாணல் போன்ற களைகள் வளர்வதை நெற்பயிருக்குத் தீமையென அதைக் களைந்து விடுகின்றனர். இதுதான் விவசாயத்தின் பண்பு, முறை, இயற்கையுங்கூட.

தமிழை வளர்க்கவேண்டும், தமிழுக்குத் தடைகளாய் இருப்பவை களைத் தகர்த்தெரியவேண்டும் என்ற உணர்ச்சி நாடெங்கும் சுடர்விட்டெரிகிறது. செந்தமிழ்ப்பயிரில் வளருங்களைகளைக் களைந்தாலன்றிப்பயிர்செழிக்காது, மாறாகச் சிதைவுறும். இது மொழிஆராய்ச்சி வல்லுனர்கள் கண்ட முடிவு.

செந்தமிழ்ப் பயிரை வளர்க்கின்றோம் என்று பறைசாற்றும் பைந்தமிழன், விவசாய நாட்டிலே, பிறந்து, வளர்ந்து, ஊராளும் அமைச்சராக அமர்ந்துள்ள அவினாசியார் களைகளால் பயிர் சிதைவுறாது எனவாதாடி, செந்தமிழ்ப் பயிரில் இந்திக் களையைக் கட்டாயமாக வளர்க்கிறார். அவர் நுண்ணறிவைக் கண்டு வெட்கப்படுவதா அல்லது பரிதாபப்படுவதா?

இந்தி என்பது இறந்த சமஸ்கிருதத்தின் மறுபதிப்பு, மாற்றுருவம். சமஸ்கிருதம் ஆரியத்தின் தாய்மொழி. ஆரியத்தின் தாய் மொழியாகிய சமஸ்கிருதம்மாண்டு மறைந்தவுடன் மறுபிறப்பாக, மாற்றுப் பெயர் பெற்று சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியுள்ள இலக்கண இலக்கிய மற்றதே இந்தி மொழியாகும். ஆதலின் இந்தி ஆரியத்தின் வளர்ப்புக் குழந்தை என்பது மறக்கமுடியாத உண்மை.

கட்டாய இந்திநுழைவு, ஆரியக் கலாச்சார நுழைவு. கட்டாய இந்தியைக்களைவது ஆரியக்கலாச்சாரத்தைக் களைதலாகும் என அறிந்த பின்பும் ஆரியக்களையை அகற்றிட அயர்வது அழகாகுமா?

தரணியாண்ட தமிழா! உன் பண்பு எங்கே? கலை கலாச்சாரம் எங்கே? எண்ணிப்பார்! சினங் கொள்ளாது சிந்தித்துப்பார்! ஆத்திரங்கொள்ளாது ஆராய்ந்து பார்!

ஒன்றே குலம் ஒருவனே தேவனென்று வாழ்ந்தாயே! இன்று ஆயிரமாயிரம் சாதிகளையும் பல கோடிக் கடவுள்களையுங் காண்கிறாயே!

கண்டதெல்லாங் கடவுளாக ஆக்கப்பட்டு அவற்றை வணங்கி வணங்கி உன் அறிவு அடகுக் கடைக்குப் போய் விட்டதே! இது ஆரியம் செய்த சதியல்லவா? இதைக் களைந்திடுவது கடமையென உணர்ந்திடுதமிழா!

தொல்காப்பியத்தைத் தொலைத்துப் புறநானூற்றைப் புதைத்து, சிலப்பதிகாரத்தைச் சிதைத்துகுறளைக்குன்றச்செய்து, பாரதம் இராமாயணம் திருவிளையாடல்புராணம் தேவாரம் போன்ற ஆரிய அண்டப்புளுகு ஏடுகள் நாட்டிலே நடமாடுகின்றதே இது நேர்மைதானா?

வண்டமிழ் நாட்டு, வரலாறு, வாழ்வு, வளம் அத்தனையையும் ஆரியம் கொள்ளை கொண்டதே! இதை அகற்றிட ஆண்மையற்றவனா தமிழன்! வள்ளுவரைமறந்தாய்! வரகவிக்கு மண்டபம் அமைத்தாய்! சேரன், செங்குட்டுவன், இளங்கோவடிகள், நெடுஞ்செழியன், என்ற உன்தமிழ்ப் பெயர்கள் எங்கே. இன்று நீ காண்பது, இராமசாமி, பக்தவத்ஸலம், ஸ்ரீனிவாசன், நடராசன், போன்ற ஆரியப் பெயர்கள்தானே. திருமுதுகுன்றம், விருத்தாஜலமாகவும், மறைக்காடு, வேதாரண்யமாகவும், உருவெடுத்ததோடல்லாமல் அங்கொரு வெத்துத்தோட்டாவும் முளைத்து விட்டதே. இது தமிழ் நாட்டிலே, தமிழ்ப்பயிரிலே, முளைத்த களையாலல்லவா?

ஆரியர் வருவதற்கு முன்பு இமயம் முதல் குமரிவரை பரவியிருந்த பசுந்தமிழ், ஆரியக்களையால் திராவிட நாட்டளவோடு சுருங்கி மற்றப் பகுதிகளில் தமிழ்மொழி அழிக்கப்பட்டு விட்டன. இங்கும் தமிழ் மொழியில் வடமொழிகள் ......(ஆரியக்களைகள்) கலக்கவே தமிழ் மொழி தெலுங்காகவும், கன்னடமாகவும், மலையாளமாகவும் சிதைவுற்று தமிழ் வழங்கும் நிலம் குறைந்தது. மொழிசிதையவே, உன் இனம், உன்சகோதரர், தெலுங்கராகவும், கன்னடியராகவும், மலையாளியாகவும் சிதைந்துபிரிந்தனர். அதனால் தமிழ் பேசும் மக்கள் அய்ந்துகோடியிலிருந்து இரண்டுகோடிகளாகக் குறைந்தது. இது நாடற்ற நய வஞ்சகர்கள் செய்த சதியல்லவா?

முத்தமிழ் முழங்கிய நாட்டிலே எத்தமிழுமின்றி விழிக்கின்றாயே!

இமயத்தில் இனக்கொடி பொறித்தாயே! இன்று இளித்தவாயனாகயிருக்கின்றாயே! எல்லாம் ஆரியமயமாயிற்றே!

நான் தமிழன் என்று சொல்லிக் கொள்ள உனக்கு என்ன உரிமையிருக்கிறது? அனைத்தையுந்தான் ஆரியம் கொள்ளை கொண்டு விட்டதே!

நான் தமிழன், என்நாடு தமிழ்நாடு என்று சொல்லிக்கொள்ள உனக்கிருக்கும் உரிமை தமிழ் மொழி ஒன்றுதானே!

தமிழ்மொழியைக் கொண்டு நான் தமிழன், என் நாடு தமிழ்நாடு என்று சொல்லிக் கொள்வதை அழிக்கவே, சிதைக்கவே கட்டாய இந்தி புகுத்தப்பட்டுள்ளது.

பல ஆண்டுகளாக தமிழை அழித்து தமிழ் நாட்டை ஆரிய நாடாக்கச் செய்த தந்திரம் பலியாது போகவே இம் முறையும் கட்டாய இந்திமூலம் ஆரியம் கலாச்சாரப் போர் தொடுத்து விட்டது.

கட்டாய இந்தியால் தமிழ் மொழி சிதையும். தமிழ் மொழி சிதைந்தால் தமிழன் சிதைவான், தமிழ் நாடு சிதையும். தமிழ் மொழி அழிந்தால் தமிழன் அழிவான், தமிழ் நாடு அழியும். ஆகவேதான் தமிழை அழித்து தமிழன்வாழ்வை அழித்து தமிழ் நாட்டை வடநாட்டுடன், என்றென்றும் அடிமைப் படுத்தவே கட்டாய இந்தி புகுத்தப்பட்டுள்ளது. ஊராண்ட தமிழா. இப்போதாவது உணர்ந்தாயா? இந்திக் களையால் தமிழ்ப்பயிர் கெடும் என்பதை. உணர்ந்தபின்பும் உறங்காதே. தரணிக்குத்தமிழன் திறமையைக்காட்ட தக்க சமயம் இதுதான்.

தேனினும் இனிய தமிழ்ப்பேசுந் தேசியத்தமிழா! வடநாட்டுக் கொள்ளையர்கள் உன்னைக்

கொள்ளை கொண்டதுபோதாதா? நய வஞ்சக ஆரியக்குள்ளநரிக் கூட்டங்கள் உன்னைச் சிதைத்தது போதும். வடநாட்டு வம்பர்களிடமிருந்து நாட்டை மீட்போம். சஞ்சலங்களை மறந்து சமர் தொடுக்கச் சித்தமாகு! ஊராளும் அவினாசியார் உணரார், அவருக்கு உணர்த்திடுவது உன்கடமையல்லவா? நாட்டை மீட்டு நலமாயிருக்க ஆரியக்களையை அகற்றிட கட்டாய இந்தியை முதலில் களைந்திடு.

"இளங்கோவன்"

(4ம் பக்கத் தொடர்ச்சி)

என்பேன் "வேலைசெய்யமுடியாத பிறவியப்பா நாராயணா" என்பேன். காசு வந்து குவியும். 4, 5 ரூபாய்க்கு குறையாது நாளொன்றுக்கு. ஒரு நாள் 6 ரூபாய்வரைசேர்ந்துவிட்டது. ஆஹா திருப்பதி வெங்கிடாஜலபதி பெயரைச் சொன்னேன். எத்தனை பெண்கள் தெரியுமா காசு போட்டார்கள்? அன்று உனக்கு ஒரு ரவிக்கையும், பையனுக்கு ஒரு சட்டையும் வாங்கிவரலாம் என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தேன். திடீரென ஒரு பையன் ஓடிவந்து என் காசு டப்பியைப் பிடுங்கிக் கொண்டு ஓடினான். கத்தினேன் காசுபோய் விட்டதே என்று, ஒருவரும் கவனிக்கவில்லை. எழுந்து ஓடிப் பையனைப் பிடித்துவிட்டேன். 5, 6 வாலிபர்கள் வந்து என்னைப் பிடித்துக்கொண்டார்கள். நான் கால் நொண்டியாக நடித்ததை மறந்துவிட்டேன். அவர்கள் "எங்கப்பயலே...கால் நொண்டியா... இப்பயார் கொடுத்தாகாலை...திருப்பதியானா காலைக் கொடுத்தான்? ஏய்க்கவா வந்தாய்? இந்த மாயவரத்தில்தான் உன் ஜம்பம் பலிக்காது...... இந்தப்பக்கமேதலைகாட்டக்கூடாது" என்று ஆளுக்கு இரண்டுஅடிகொடுத்து பணத்தையும் கொடுத்து விரட்டி விட்டார்கள். அவர்கள் அந்தஊர் திராவிடர் கழகத்தாராம்."

"மறுநாள்தான் நான் மருதூர் சுந்தரேசய்யரிடம் வேலைக்கமர்ந்தது. அய்யர் என்னை நன்றாக அறிவார் நான் பொதுக்கூட்டங்களில் சர்க்காரைத்தாக்கிப்பேசியது, பணக்காரர்களை திட்டியதுஎல்லாம் நன்றாகத்தெரியும். இருந்தாலும் நான்வேலைக்குக் கேட்டதும் அவர் எவ்வித மறுப்பும் கூறாமல் உடனே சேர்த்துக் கொண்டார். அதனுடைய கருத்து இப்பொழுது தான் தெரிகிறது. தர்மு! அய்யரின் மகள் மஞ்சுளா மகா அழகி. அவள் படித்துக் கொண்டிருந்தபோது ஒரு பத்தர் பையனை காதலித்தாளாம். அவன் இவளுக்கு ஏராளமான நகை கூட செய்து போட்டு காசும் செலவழித்திருக்கிறானாம். ஆனால் அவள் மாலையிட்டது வேறொரு பார்ப்பனனுக்கு. அதற்காக வஞ்சம் தீர்க்க நினைத்துத்தான் வந்து கொலைசெய்தானோ என்னவோ... அன்றிரவு...... நான்போய்ச்சேர்ந்த அன்றிரவுமஞ்சுளா மரணப் படுகாயமடைந்தாள் கத்தியால் குத்தப்பட்டு. அய்யர் வீடும் கொள்ளையடிக்கப்பட்டது. குற்றவாளியாக நான் ஒப்படைக்கப்பட்டேன். அன்று இலையரியும் போது கத்தியால் கையை அறுத்துக் கொண்டு வழிந்த இரத்தச் சொட்டுகள் என் வேஷ்டியில் பட்டிருந்தது. அது நான்தான் கொலையாளி என்று நிரூபித்தது.

"தர்மு! நான் எப்படி மரணபாதைக்குக் கொண்டுவரப்பட்டேன் பார்த்தாயா? நான் சாகப்போகிறேன். நீ எப்படியாவது பிழைத்துக் கொள். பார்ப்பனர் வீட்டு வாசலை மாத்திரம் மிதித்து விடாதே. சட்டம் என்னைத் தண்டித்து விட்டது. எனக்கு நிம்மதிதான். எது விஷயத்தில்......... நான் காதலித்துக் கடிமணம் செய்த உன்னை இதுவரை, நான் இருக்கும் வரை கலங்க விடாமல் செய்தேன் பார் அந்த ஒரே விஷயத்தில்தான். தர்மு...போகிறாயா...அழாமல் போ. மகனைக் காப்பாற்று...

தர்மு...தர்மு..."

* *

சிறைக்கதவு திறக்கிறது. என்னப்பா 114. பயல் பிரமாதமா சப்தம் போடுறான். ஆனால் இன்னும் தூங்குறானே. மணி 7 ஆயிடுச்சு......சரி எழுப்பு" என்றான் 113ம் எண்ணுள்ள போலீஸ்...... "தூக்குத் தண்டனை பெறப் போறான்லே ஏதாவது கெட்ட கெனவு கண்டிருப்பான...சரி எழுப்பி விடு..." என்றான் 114. இரு உருவங்களும் மரமேறித் தோழனை எங்கோ அழைத்து சென்றன.

சித்தி நாராயணசாமி—நூர்ஜஹான்

திருக்கோட்டியூர் 16-11-48.

14—11—48ம் நாள் காலை 9½ மணிக்கு திருக்கோட்டியூர் தோழர் நீ. சித்தி நாராயணசாமியும் திருமயம் தோழியர் சி. நூர்ஜஹானும், தெம்மாப்பட்டு ஆசிரியர் தோழர் முருகையா தலைமையில் சீர்திருத்தத் திருமணம் செய்துகொண்டனர். பல தோழர்கள் பாராட்டிப்பேசினர். ஏராளமான அன்பளிப்புகள் மணமக்களுக்கு அளிக்கப்பட்டன.

சித்ரகோட் மூலிகைகள்
ஆஸ்த்மாவுக்கு பரிகாரம்.
16—12—48 பௌர்ணமி தினத்தன்று ஒரே ஒரு தடவை உட்கொண்டால் ஆஸ்த்மா நோயை முற்றிலும் குணப்படுத்தி விடக்கூடிய, உலகப் புகழ்பெற்ற, அதிசக்தி வாய்ந்த அற்புத மருந்து. ஆங்கிலத்தில் எழுதுக:
SWAMI DARSHANA NANDA
Ayurvedashram
P. O. Chitrakot, U. P.

[3ம் பக்கத் தொடர்ச்சி]

சொல் சொல் மனமே இதில்
சூது ஏதுமுள்ளதோ
செயல் சோரமாகுமோ
என் காதல் தீது ஆகுமோ
பெற்றவரும் அறிந்துவிட்டாலோ
பேதை என்று தூற்றிடுவாரோ
மாநிலமேலே மாநிலமேலே (மா)
ஆடவர் மனம் பெண் இனத்
தையே—தினம்
ஆழ்த்திவைத் தடிமை
கொள்வதேன்
மாநிலமேலே மாநிலமேலே
பெண்கல்வியதாம் அதை
வானளாவப்பேசுவார்
பெண் காதல் வாழ்விலே
சாதிபேதம் பேசலாகுமோ
என் மனதின் காதலதாலே—நான்
இன்னும் என்னதானோ சொல்லு
வேன் (நா)

[என்று பாடிக்கொண்டிருக்கும் போது இராஜன் வருவதறிந்து மலர்ச் செடிக்குள் ஒளிந்து கொள்கிறாள்]

இராஜன்:- ஏன்...! இன்னும் விமலா வரக்காணோம்?

[என்று தனக்குத் தானே கேட்டுக் கொண்டு பசும் புற்றரையில் அமருகிறான்]

விமலா:- [இராஜன் அறியாமல், அவன் மடியில் ரோஜா மலரைப் போட்டு விட்டு ஒன்றும் அறியாதவளைப் போல் நிற்கிறாள்]

இராஜன்:- [அம்மலரை எடுத்து முத்தமீந்த பிறகு] ஓகோ! இது ரோஜாவோ...! [என்று கூறிக் கொண்டே எழுந்து சென்று] விமலா! நான் இதை உன் கன்னம் என்றல்லவா எண்ணிக் கொண்டேன்...

விமலா:- அதனால்தான் என் கன்னத்திற்கு இவ்வளவு நஷ்டம்!

இராஜன்:- ஏன்...! என்ன நஷ்டம்?

விமலா:- என் கன்னத்திற்குக் கிடைக்க வேண்டிய முத்தத்தை அம்மலரன்றோ அபகரித்துக் கொண்டது.

இராஜன்:- விமலா! உன் ஒளி முகத்தைக் காணும் என் கண்ணெதிரில் வெண்ணிலாவும் வான வீதியிலே வெளிவருமோ...? ஆனால், நீ என் அருகிலில்லாதபோது ஒரு நாள் என்னை வதைக்கவோ என்னவோ! அந்நிலா வந்ததுண்டு! அப்போது என் கண்களே எனக்குப் புண்களாயின! என்ன இருந்தாலும், குளிர் மதிக்கு 'மதி' என்பதே இல்லை. அன்று நீலவான்

ஆடைக்குள்ளே உடல் மறைத்த நிலா உன் ஒளி முகத்தை அதன் முகம் போல் வெகு தூரத்திற்கு அப்பால் வைத்துக்காட்டலாமா? அப்போது எனக்கு எப்படி இருந்திருக்கும்? இது போன்ற ரோஜா மலரா...? உடனே எடுத்து முத்தம் ஈந்துவிட? அல்லது இறக்கைகள் இருக்கின்றனவா! உடனே பறந்து சென்று...இப்படிக் கட்டித்தழுவ...?

விமலா:- காதலரே! என்னை விட்டு விடாதீர்...! அதோ அந்த அடிவானத்தில் பாருங்கள்! அது சூரியனல்லவா...? நாம் இப்படியே இருப்போமானால், அதன் வெப்பமும் நம்மை என்ன செய்ய முடியும்...?

இராஜன்:- சூரியன்...! அது உன் தரிசனத்தால்தானே தங்கக் கலசமாகிப் பொன்னாற்றில் மிதந்து செல்கிறது அதோ பார்!

விமலா:- ஆம். அன்பரே! நீர் என் ஆவி! நான் உம்மைப் பிரிந்தால் சூரியனல்ல, சந்திரனாயிருந்தாலும் என்னைச்சுட்டுப்பொசுக்கி விடுமே...

(4) [பாட்டு: 'பிய்யாமிலுனக்கே...' என்ற மெட்டு]

இராஜன் & விமலா } என்றும் பிரியோம் நாம்-இனி இன்ப
முடன் வாழ்வமே (எ)
உயிர் ஒன்றாம் உணர்வமே
உண்டிாண்டுடலாமே (எ)
விமலா:- கூறும் பேரின்பமே
வேறே எது ஆகுமோ
இராஜன்:- வீண் வேதமே ஓதுவா அன்பே அறிந்திடாரே (எ)
விமலா:- கட்டிநீர் அணைந்திடும்
முத்தம் ஒன்றேனும்
பெற்றாலன்றோ சற்றேயவர்
மாண்பே பெறாரே—மகாத்
துறவி என்பாரே (எ)
இராஜன்:- என்னே சிறிதான
இன்பமோ
நாமே புரி காதலே......
விமலா:- பேரின்பமன்றோ
காதலே
பேதமே சொல்வாருண்டோ (எ)

காட்சி. 5.

[வீதி.]

உறுப்பினர்:- சிதம்பர முதலியார், வைகுண்டசாஸ்திரி.

கதை அமைப்பு:- [சாஸ்திரியார் முதலியாரைச் சந்தித்து 'மனுநீதி தர்மசாஸ்திரத்தின் மாதர் பகுதி' என்ற புத்தகத்தைக் கொடுத்து விட்டுப்போகிறார்]

சாஸ்திரி:- முதலியார்வாள், நமஸ்காரம், நமஸ்காரம்! நீங்க தூரத்லே வரச்சேயே நான் கவனிச்சிண்டு ஓடிவர்றேன்...

முதலியார்:- நீ யாரப்பா... அடையாளமே தெரியல்லையே...?

சாஸ்திரி:- என்ன அப்படிச் சொல்லிட்டேள்! நான் உம்ம ஆப்த நண்பர், அத்யந்த மனுஷர் கைலாச சாஸ்திரியின் மகன் வைகுண்ட சாஸ்திரியோன்னோ!

முதலியார்:- ஓகோ! ஆமாம் மாம்...கைலாச சாஸ்திரிக்கு வைகுண்ட சாஸ்திரினு...ஒரு மகன் இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன்...அது நீர்தானோ...?

சாஸ்திரி:- ஆமாம் சந்தேகமே இல்லை. சாட்சாத் பூசுர வைகுண்ட சாஸ்திரியார் என்பது நானேதான்!

முதலியார்:- சரித்தான்! உம்முடைய அப்பா கைலாச சாஸ்திரியார் 'கைலாசத்திலே' சேர்ந்துவிட்டார் என்று...

சாஸ்திரி:- அய்யோ...! எந்தப் பாவிப்பயல் உங்களண்டே இந்த அபாண்டத்தைப் புளுகினான்...?

முதலியார்:- ஏன்...! அப்படியானால் உம்முடைய அப்பா இன்னும் 'கைலாசத்தில்' சேரவில்லையா...?

சாஸ்திரி:- என்ன முதலியார்வாள்! நீங்களுமா இப்படிக் கேட்கறேள்...? இப்போத்தானே இப்புஸ்த்தகத்தை உம்மண்டை கொடுத்துட்டுவான்னு அனுப்பிச்சார்...? அதுக்குள்ளாக நீங்கள் இப்படிச் சொல்றேளே...ஊஹ ஹூம்...

முதலியார்:- அடடடே...! என்ன சாஸ்திரியாரே, நடுத்தெருவிலே நின்று அழுக ஆரம்பித்து விட்டீரே...?

சாஸ்திரி:- வேறே என்ன பண்ணச் சொல்றேள்...மலை மீபாலிருந்த என் அப்பா கைலாசத்தில் சேர்ந்துட்டாருன்னு......சொல்றேளே...ஊ...ஹ உஹூம்உஹூம் ஹூம்...

முதலியார்:- சேச்சே...! நான் சொன்னதை, நீர் தப்பாக நினைத்தல்லவா அழுகிறீர்...! உம்முடைய அப்பா 'கைலாசம்' என்ற ஏதோ ஒரு புராணப் படத்தில் சேர்ந்து நடிக்கப்போவதாகக்கேள்விப்பட்டேன் என்றுதானே சொல்லவந்தேன்...!

சாஸ்திரி:- ஓகோ...! அதைப் பற்றிச் சொன்னேளா! அப்படித் தெளிவாச்சொல்லுங்கோன்னா...! அட அட அடா! என் அப்பாவுவுடைய நடிப்புன்னா...! அது என்ன நடிப்பா...!! அப்படியே தத்ரூபமா இருக்கேன்னு டைரக்டர்வாளே அபாரமா மெச்சிப் புகழ்ந்து தள்ளிப்போட்டாருனாக் கேட்கறேளே...?

முதலியார்:- அப்படியா! உம்முடைய அப்பா என்ன வேஷம் போட்டிருக்கிறார்...?

சாஸ்திரி:- சாட்சாத் கைலயங்கிரி வாசனாகிய சிவபெருமானின் திவ்வியத் திருவேஷம் போட்டுண்டு அற்புதமா நடிக்கிறார் போங்கன்னா...

முதலியார்:- ரெம்பசரி! அந்தப் படத்தை டைரக்ட் பண்றாரே அவர் என்ன சாதியோ...?

சாஸ்திரி:- டைரக்டரை ஒரு ஆங்கிலோ இண்டியன்னுசொல்றா! என்றாலும் நம்பளவாளுக்குரெம்ப நல்ல மனுஷர்...!

முதலியார்:- என்னதான் நல்ல மனுஷராக இருந்தாலும்! நம்ம சாட்சாத் கைலயங்கிரிவாசனாகிய சிவபெருமான் அவருக்குக் கனவிலும் காட்சி அளித்திருக்கக்கூடுமோ...?

சாஸ்திரி:- அது என்னமா முடியும்? சேச்சே...ஒருக்காலும் முடியாது! ஹிந்துக்களல்லாதாருக்கு, அதுவும் பிராமணோத்தமர்களைத் தவிர வேறு யாருக்கும் அந்தப் பாக்கியம் கிட்டுமோ...?

முதலியார்:- கிட்டாதே...! அப்படி இருக்க; எப்படி அந்த ஆங்கிலோ இண்டியன் உம்ம அப்பாவுடைய வேஷத்தைப் பார்த்து விட்டுத் தத்ரூபமாச் சிவபெருமானைப் போலவே இருக்கென்று சொன்னான்...?

சாஸ்திரி:- அது என்னமோ முதலியார்வாள்! அந்த டைரக்டர் சொன்னாருனு எங்கப்பா என்னண்டை சொன்னார், நான் உம்மண்டை சொன்னேன் அவ்வளவுதான்! அதுக்குமேலே நேக்கொன்னுந் தெரியாது!

சரி. அது எப்படியோ போகட்டும்! நீங்க உம்ம மகள் விமலாவுக்கு வரவர நம் சாஸ்திரங்களின் மீதுள்ள நம்பிக்கை குறைகிறாப் போல் தோன்றதன்னு என் அப்பாவண்டை வந்து முறையிட்டுண்டாராமே...?

முதலியார்:- ஆமாம். உங்கப்பா அதைப்பற்றிக் கேட்டார்; சொன்னேன்!

சாஸ்திரி:- அதுக்கோசரம் இந்த 'மனு நீதி தர்ம சாஸ்திரத்தின்

சாராம்சம்' அடங்கிய புஸ்தகத்தை விமலாவிடம் கொடுத்துப் படிக்கச் சொல்லும்படி உம்மண்டை கொடுத்துச் சொல்லச்சொன்னார்! இந்தாரும் புஸ்தகம்...நான் போயிட்டு வர்றேன்... [என்று கொடுத்து விட்டுப் போகிறான்]

முதலியார்:- சரி சரி! கொடும்; கொண்டு போய்க் கொடுத்துப் பார்க்கிறேன்! இந்தக் காலத்துப் பெண்! அதுவும் நவ நாகரீகம் நிறைந்த சர்வகலாசாலை மாணவியா 'மனு நீதி தர்ம சாஸ்திரத்தை' மதித்துப் படிக்கப்போகிறாள்...? ஊகூம். எனக்கு நம்பிக்கை இல்லை! எதற்கும் கொண்டு போய் விமலாவுடைய புத்தகங்களோடு போட்டு வைப்போம்...... [என்று கூறிக்கொண்டே போகிறார்]

★

அறிஞர் அண்ணாதுரை.

ரோமாபுரி ராணிகள்	2	4	0
கம்பரசம்	1	8	0
குமரிக்கோட்டம்	1	0	0
விடுதலைப்போர்	1	0	0
கற்பனைச்சித்திரம்	1	0	0
சிறுகதைகள்	1	0	0
ஆரியமாயை	1	0	0
உலக பெரியார் காந்தி	1	0	0
ரேடியோவில் அண்ணா	0	12	0
வர்ணாஸ்ரமம்	0	12	0
ஏ தாழ்ந்த தமிழகமே	0	8	0
திராவிடர் நிலை	0	6	0
நாடும் ஏடும்	0	6	0
மே தினமும் திராவிடர் கழகமும்	0	5	0
நல்ல தீர்ப்பு	0	4	0
மகாத்மா காந்தி	0	3	0

விற்பனை உரிமையாளர்

நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரி வீதி, ஈரோடு.

குரு தைலம்

மிகச் சிறந்தது

தலைவலி ஜீரம் ஜன்னி முதலிய சகலவித வாய்வு வலிகளுக்கும் நிகரற்றது

210-வியாதிகளுக்கு அரசன்

248

GURUCURES

22

Alvar

டாக்டர் ஏ. மதுரம் சன்ஸ்

குரு மருந்து சாலை ...... திருச்சிராப்பள்ளி

குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

★

தத்துவவிளக்கம்	0	12	0
இந்தியாவின் குறைபாடுகள்	0	8	0
பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்)	0	8	0
நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா?	0	6	0
கர்ப்ப ஆட்சி	0	6	0
பெரியார்பெருந்தொண்டு	0	6	0
வெளியேறு	0	6	0
பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம்	0	4	0
பொதுவுடைமைத் தத்துவங்கள்	0	4	0
புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை)	0	4	0
மதப்புரட்சி	0	4	0
வால்டையரின் வாழ்க்கைச் சரிதை	0	4	0
கார்ல் மார்க்ஸ்	0	4	0
சமதர்ம உபன்யாசம்	0	4	0
அப்பரும் திருஞான சம்பந்தரும்	0	3	0
சோஷியலிசம்	0	3	0
இலங்கை உபன்யாசம்	0	3	0
இராமாயணப் பாத்திரங்கள்	0	3	0
மேல்நாடும், கீழ்நாடும்	0	3	0
உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை?	0	3	0
இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து!	0	2	0
இதிகாசங்கள் புகட்டும் நீதி	0	2	0
உண்மைத் தொழிலாளி யார்?	0	2	0
திருச்சிப் பிரசங்கம்	0	2	0
ராமலிங்க சுவாமி பாடல்	0	2	0
திராவிடர்-ஆரியர் உண்மை	0	2	0
தமிழ் இசை-நடிப்புக் கலைகள்	0	1	0

கிடைக்குமிடம்:-

நாதன் கம்பெனி லிமிடெட்,

கச்சேரி வீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press Old No. 42, New No. 59, Cutcherystreet, ERODE